

# குருதேவர்


குருதேவர் அறிக்கைகள் 39, 40, 41 இணைந்த வெளியீடு

(இ.ம.இ. உறுப்பினர்களுக்கு மட்டும்) பதிவு: 135/83.


## பேரின்பப் பெருநிலை



[அட்டைப்பட விளக்கம் அடுத்த பக்கத்தில்]


மூன்றுமாத அறிக்கையின் காணிக்கை ரூபாய். 7 50 வெளியீடு: 18—6—87

# பேரின்பப் பெருநிலை

## "ஆன்மீக ஐக்கிய அண்ட பேரண்டச் சத்தி நிலை"
## "ஓகாசன மோக போக ஏகத் துய்ப்பு நிலை"
## "அரசயோகமும் அண்ட பேரண்ட ஆதிசத்திப் பூசைச் சித்தியும் வழங்கும் நிலை"

பதினெட்டு வகைக் காடுகளிலும் பகலிரவாய்ச் செய்யக் கூடியது. இதனை **'முயற்சியின் முதிர்ச்சிநிலை', 'பயிற்சியின் தேர்ச்சிநிலை'** என்று குறிக்கிறார்கள் பதினெண்சித்தர்கள். இப் பெருநிலை பற்றிய விளக்கங்கள் எழுதிககாட்டியோ, சொற்களால் பேசிக்காட்டியோ முழுமையடைய இயலாது. அதாவது, இப்பெருநிலை -யை அவரவர் குருவின் துணையால், குருவின் வழியாக, குருவைத்தனனுள் பெற்றுத் தான் முறையான பயிற்சியால் உணர முடியும். இதற்குக் குருவால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருளப் பெற்றவராக இருப்பவர்தான் முயற்சி செய்தல் வேண்டும்.

குண்டலினியும். ஆருதாரச்சத்திகளும், **ஆன்மீக** வெளிப்பாட்டு ஐக்கியமும்; [பெண்கள் இதனைச் செய்வது பெரும்பாலும் இல்லை. பத்தினி, சித்தினி, கிங்கினி, யோகினி எனும் நான்கு வகைப் பெண்டிர் மட்டுமே செய்ய முடியும்.], ககனப் பரவெளிப் பயண அண்ட பேரண்டச் சத்தி நிலையும்; ஓகாசனப் பத்தி சத்தி, சித்தி, முத்தி நிலைகளும்; மோகமும், போகமும் ஊற்றுக்கும் ஏகத்துய்ப்பு நிலையும்... ஒன்றோடொன்று போரிட்டு அடங்கி ஒடுங்கிடும் **பேரின்பப் பெருநிலையே** இந்நிலை.

உடம்பின் நடுப்பாகத்தில் மெய்விளக்கை இரு அகங்கையுள்ளும் ஏற்றி; ஞானச்சுடரை முகமனைத்தும வெளிப்படுத்தி; எத்திறத்தாரும் தோற்ற மாறச் சித்தியால் அருள்வழங்கும் நிலையே இந்நிலை வலக்கால் மேலோங்கி (ஆண்மையை) ஆன்மீகத்தை ஆட்சியாககுகிறது. குய்யம் விரிந்து மெய்வாய் நூற்றைம்பதாயிரம் [ஒன்றரை லட்சம்] திறந்து துய்ப்பில் மகிழும் **ஏகத்துய்ப்பு நிலையே இது** அரசயோகியால்தான் இந்நிலையில் அமருதல் இயலும். பிறம்மயோகியும் அமரலாம்; ஆனல், அடக்கம். அமைதி, நிறைவு துய்ப்பு.....முதலிய உணர்வுகளை வெளிப்பாடு செய்ய இயலாது.

**ஆதார நூல்கள்:** I குருபாரம்பரியம், II இலக்கிய பாரம்பரியம்,

III 'அருட் போகச் சாரநூல்கள் பதினெட்டு;
கருநிலை, குருநிலை. தருநிலை, திருநிலை, அருள்நிலை, மருள்நிலை X வாக்கு, வாக்கியம், **வாசகம்** = (6X3 =18) பதினெட்டு]

---

(35-ஆம் பக்க தொடர்ச்சி)

தன்மானவுணர்வும் தன்னம்பிக்கையுணர்வும் உடையவர்களையும்; விடுதலையுணர்வுடையவர்களையும்; உரிமை வாழ்வையே உயிராகப் போற்றுபவர்களையும், பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் நாகரீக மரபுகளையும் கண்ணெனப் போற்றுபவர்களையும்; தாயக வரலாற்றுப் பேருண்மைகளைப் பெருமிதத் -தோடு காத்துச் சமுதாயக் கட்டமைப்புக்களை வலிமைப்படுத்துபவர்களையும்;... மட்டுமே அனைத்து வகையான நிறுவன நிர்வாகப் பணிகளையும் நிகழ்த்திடுமாறு செய்யும் அருளாட்சியைக் கட்டாயமாக விரைவில் அமைத்தேயாக வேண்டிய அவசர அவசிய நிலை வந்துவிட்டது. இந்தநிலை, உலகம் முழுதும் வந்துகொண்டே இருக்கின்றது. அதற்காக நமது தாய்நாட்டில் முதன்முதலாக அருளாட்சி -யை குருபாரம்பரியம், அரச பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் உள்ளிட்ட அனைத்துப் பதினெண் சித்தர் நூல்களும் குறிப்பிடும் 1992 முதல் 1996 க்குள் அமைப்பதுதான் சரி! முறை! அறம்! —அதற்காகவே இந்து மறுமலர்ச்சி இயக்கமும்; அதன் கீழுள்ள நாற்பத்தெட்டு வகையான அமைப் -புக்களும் பாடுபடுகின்றன. இதில் உடனே நேரடியாகப் பங்கேற்குமாறு அனைவருக்கும் வேண்டு கோள் விடுக்கிறோம் யாம்.

அன்பு— **அருளாட்சி நாயகம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**

# முன்னுரை

## சோதனை + வேதனை = சாதனை

* குருமகா சன்னிதானம்
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்
பதினெண் சித்தர் பீடம், மடம்

இந்து மறுமலர்ச்சி இயக்க உறுப்பினர்களே! அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரர்களே! தமிழ் மொழி, இன, நாட்டுப் பற்றாளர்களே! இந்துமத வாய்மையானர்களே! அருளுலக ஆர்வலர்களே! ஆதரவாளர்களே! ஏந்தாளர்களே! எதிலும் ஈடுபாடற்று நடுநிலைப் போக்குடையராயுள்ள எம் தாயகப் பெருமக்களே! நாட்டில் என்ன நடக்கிறது என்று எண்ணிப் பார்க்கத் தெரியாமல் இளமை வேகத்திலும் மோகத்திலும் வாழும் எம்மினத்து இளைஞர்களே!... உங்களனைவர்க்கும் சிலமாத நெடிய இடைவெளிக்குப் பிறகே நமது இயக்கக் 'குருதேவர்' ஏட்டின் மூலம் செய்திகளையும் கருத்துக்களையும் வழங்க முன் வந்துள்ளோம் யாம் இது, ஒரு பெரிய சோதனையே! நம்மவர்களோடு 'குருதேவர்' அறிக்கையின் மூலம் தொடர்பு கொள்ள முடியாமற் போனது சொல்ல முடியாத வேதனையே! இருந்தாலும், இச்சோதனையும் வேதனையும் நல்ல பல சாதனைகளை வழங்கியுள்ளன என்பதனைப் பெருமகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம் யாம்.

யாம், தனித்து எம் முயற்சியிலும் ஈடுபடாமல் தகுதியுடையார் எவர் கிடைத்தாலும் சரி; அவர்களையெல்லாம் ஒன்று திரட்டி, ஒற்றுமைப்படுத்தி, ஒரு முகப்படுத்தியே செயல்படுத்துகிறோம். இருந்த போதிலும், எமக்குக் கிடைக்கக் கூடியவர்களின் தரம், திரம், தீரம் திறம்...... முதலிய பண்பு நலன்களையும்; கொள்கைப்பற்று, குறிக்கோள் பிடிப்பு, செயல் உறுதி, தலைமையிடத்துள்ள அசைக்க முடியாதஅளக்க முடியாத நம்பிக்கை; தலைமையின் ஆணையைச் சொந்த பந்தபாச உணர்வுகளுக்கும், உலகியலின் மதிப்பீடுகளுக்கும், பிறரின் ஒப்புதல்களுக்கும், உணர்வுப் போராட்டங்களுக்கும், அறிவியல் சிந்தனைகளுக்கும் அப்பாற்பட்டு உடனுக்குடன் அப்படியே செயலாக்கிடும் செயலூக்க வீரம்,...... முதலிய அரிய பெரிய சீரிய நேரிய ஆற்றல்களையும்; காலப் போக்கில் எடையிட்டே ஒவ்வொருவரிடமும் அவரவரால் செய்ய இயலக் கூடிய பணியினை ஒப்படைத்து வருகிறோம். எனவேதான், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், அதன் கீழுள்ள நாற்பத்தெட்டுக்கும் மேற்பட்ட நிறுவன நிர்வாகங்களையும் இமயம் முதல் குமரிவரையுள்ள பரந்த இந்துமத இந்தியாவுக்குள் மட்டும் வளர்க்காமல்; இம்மண்ணுலகிலுள்ள எல்லா நாடுகளிலும் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்தும் கூட வளர்த்து வருகிறோம் யாம். இதனால்தான் 'உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு', 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம்', 'உலக இன விடுதலை இயக்கம்', 'உலக மொழி விடுதலை இயக்கம்', 'உலகப் பண்பாட்டு விடுதலை இயக்கம்', 'உலக மத விடுதலை இயக்கம்'......என்பனவற்றையெல்லாம் யாம், எங் கொள்கை அளவோடு நிறுத்திடாமல்; செயலளவில் நுண்மையாகவும், திண்மையாகவும், அமைதியாகவும், நிதானமாகவும் நிறைவேற்றிட முடிகின்றது:-

1. எமது வெற்றி; தனிமனித வெற்றியாகாது!
2. யாம், தனி மனிதரல்ல!; ஒரு மாபெரும் உலக இயக்கம்!
3. யாம், எம் காலத்து உலகவரலாருகவே வாழுகிருேம்! வளருகிருேம்!
4. யாம், மனித இனத்தின் உயிர்த் தத்துவ வித்துக்களின் விதைப்பண்ணை யாவோம்!
5. யாம், தமிழ்மொழி, இனம், நாடு எனும் முக்கோணச் சத்திபீடத்தின் சீவனுவேரம்!
6. யாம், தமிழின விடுதலேயே இந்துமத விடுதலேயென்ற தத்துவத்தின் மெய்ப் பொருளாவோம்!
7. யாம், தமிழ் மொழி அண்டபேரண்டமாளும் அருளுலக ஆட்சிமொழி என்ற உண்மையின் சான்ருவோம்!
8. யாம், மதமே மானுடத்தின் துய்ப்புக்கும், தூய்மைக்கும், வாய்மைக்கும், உய்வுக்கும் வழியென்ற தத்துவத்தின் விளக்கமாவோம்!

......... ......... ......... ......... ......... .........

[விரிவஞ்சி இவ்வாசகங்களே இவ்வளவில் நிறுத்துகிருேம்]

'நமது தமிழ்மொழிதான் உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி'; 'நமது இந்து மதம்தான் உலக விஞ்ஞானங்களுக்கும், மெய்ஞ்ஞானங்களுக்கும் பிறஞானங் -களுக்கும் தாய்'; 'நமது தமிழினம் தான் இம்மண்ணுலகின் முதல் இனம், மூத்த இனம்'; 'நம் தமிழர்கள்தான் பதினெண் சித்தர்களாலும் பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட அருளுலக வித்துக்கள், சொத்துக்கள், வாரிசுகள், மூலவர்கள், காவலர்கள் ; 'நமது அமுதத் தெய்வத்தமிழ் மொழியின் எழுத்துக்களுக்கும், சொற்களுக்கும், வாக்குகளுக்கும், வாசகங்களுக்கும் தான் நோய்களேயும், பேய்களேயும், நாள்கோள் மீன் பாதிப்புக்களேயும், பிற நலிவு மெலிவுகளேயும் போக்குகின்ற ஆற்றலுண்டு. இப்பேருண்மைகளே எழுதியும், எடுத்துச் சொல்லியும், எமக்குக் கிடைப்பவர்கள் மூலம் செயலாக்கியுமே வாழுகிருேம், யாம்.

இப்படி யாம், மாபெரும் அரிய, பெரிய, சீரிய, நேரிய... பணிகளுக்காக மாவீரர்களேயும், அருட்படைத் தளபதிகளேயும், அருட் பட்டாளத் தளபதிகளேயும், அருட்சேனேத் தளபதிகளேயும், அருட்பணித்தலேமை அலுவலர்களேயும், அதிகாரி -களேயும்...... தயாரிக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டிருக்கிருேம். எனவேதான், யாம், உலகியல் மறந்தும், துறந்தும், மறுத்தும், வெறுத்தும், கடந்தும், அப்பாற் -பட்டும்,... பலவகையான கடுமையான, கொடுமையான... சோதனேகளேயெல்லாம் செய்து உரியவர்களேத் தேர்ந்தெடுக்கிருேம். இதனுல், எண்ணற்ற வேதனேகளேயும், மிகமிகப் பெரிய தோல்விகளேயும், எதிர்பாராத ஏமாற்றங்களேயும் போக்கிட இயலாத ஏக்கங்களேயும்... பெற்றிட நேரிடுகின்றது. இருந்தாலும், யாம் 1992-96 -க்குள் நிகழவிருக்கும் அருளாட்சி அமைப்புப் பணிக்காக விரல் விட்டு எண்ணக் கூடிய தளபதிகளே, அலுவலர்களே, அதிகாரிகளே, மாவீரர்களேத் தயாரித்தேயாக வேண்டும்! தயாரித்தேயாக வேண்டும்! தயாரித்தேயாக வேண்டும்!

ஒரு வேளே, எம்மால், யாம் எதிர்பார்க்கக் கூடிய பக்குவமுள்ளவர்கள் போது -மான அளவு தயாரிக்கப்பட முடியாற்போகுமேயானுல்; அதற்காக யாம் ஏக்கமோ,

ஏமாற்றமோ அடைய மாட்டோம்! அடைய மாட்டோம்! அடைய மாட்டோம்! அடையவே மாட்டோம்! அதாவது, யாம் எமக்குக் கிடைத்துள்ளவர்களையெல்லாம் அவரவர் பக்குவத்துக்கும், ஆற்றலுக்கும், ஆர்வத்துக்கும், நம்பிக்கைக்கும்... ஏற்பப் பலவகைகளாகப் பகுத்துப் பட்டியலிட்டு எண்ணற்ற சிறிய பெரிய அணிகளையும், குழுக்களையும், தனித்தனிச் செயல்நிலைகளையும் உருவாக்கிடுவோம். அப்படி உருவாக்கப் பட்டவைகளிடம் அருளாட்சி அமைப்புப் பணியின் பல்வேறு வகையான பொறுப்புக்களில் உரிய உரிய பொறுப்புக்களைத் தேர்ந்தெடுத்தே ஒப்படைப்போம். அதிலும், பல பேராற்றல் மிக்க நல்லவர்களை அருளாட்சி அமைந்த பிறகும் அருளாட்சி சிறந்திட எப்படியெப்படி உழைக்க வேண்டும் என்பதற்குரிய பயிற்சிகளையும் இந்த அருளாட்சி அமைப்புப் பணியின் போதே பெற்றிடும்படிச் செய்திடுவோம். எனவே, யாம் எக்காரணம் பற்றியும் ஒரு துரும்பைக் கூட அதாவது ஒரு சாதாரண மனிதரைக் கூட வீணாக்கிட மாட்டோம்; வேண்டாமென்று ஒதுக்கிட மாட்டோம்! மாட்டோம்! மாட்டோம்! மாட்டவே மாட்டோம்!. ஆனால், இரகசியம் காக்கும் பண்பும், எல்லோருடனும் ஒத்துப்போய் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டுமென்ற உண்மையான உள்ளுணர்வும்; தலைமையைத் தன்னுயிரென மதிக்கும் கருத்தும்; என்றைக்கும், கொள்கைக்கோ, குறிக்கோளுக்கோ துரோகமோ விரோதமோ பெற்றிடாத சிந்தைத் தெளிவும்; இறுதிவரை உறுதியுடன் போராடும் நெஞ்சுரமும்; அருளுலக ஏட்டறிவும் பட்டறிவும் போதுமான அளவு பெற்றவரும் ...... என்று சிறப்புத் தகுதிகளைப் பெற்றவர்களே இயக்கத்தின் உயிரோட்டமாகவும், முன்னேட்டமாகவும், மூல அணிச் சத்தியாகவும் செயல்பட அநுமதியும் ஒப்புதலும் பெற்றிடுவர். அதற்குத் தாத்தாக்கள், ஆத்தாக்கள், ஆமையப்பன், தேவிகள்........ முதலானோரின் பரிந்துரையும் முடிவுமே ஏற்கப்படும். இதுபற்றி எல்லோரும் புரிந்து கொள்ள இயலாது! இயலாது! இயலாது! இயலவே இயலாது! ஏனெனில், நமது இயக்கம் அருளாளர்களின் ஆணைகளால் இயங்கும் ஒன்றாகும்.

யாம், இவ்வளவு தூரம் எம்மையும், எமது செயல்நிலைகளையும் பற்றித் தன்னிலை விளக்கம் கொடுப்பது பற்றி அனைவரும் சிந்திக்க வேண்டும். ஏனெனில், நம்மவர்களுக்கிடையில தனித்தனிக் குழு மனப்பான்மை (Groupism); தனிமனித ஆதிக்கங்கள் (Individual Command); தேவையில்லாத போட்டிப் பொருமைகள்; சிலருக்கு மட்டும் குருதேவர் அதிகச் சலுகையும ஆதரவும் தருவதாக வருத்தம்; பலர் குருதேவர் பிறரின் புகார்களை நம்பித் தம்மீது நடவடிக்கைகள் எடுக்கப் பட்டதாக வருந்துவது; பலர், தங்களுக்குக் கண்டிப்புக்களும், தண்டனைகளும் வழங்கப்பட்டதைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் வருந்துதல்; பலர், தங்களுடைய உழைப்புக்கும் ஊக்கத்துக்கும் எதிர்பார்ப்புக்கும் ஏற்ற பயன் கிடைக்க வில்லையே என்ற ஏக்கமும ஏமாற்றமும் பெற்றிருத்தல்; சிலர், தங்களால் முழுமையாகக குருதேவரின் ஒப்புதலையும் ஏற்புதலையும் எதிர்பார்த்த அளவு விரைவில் பெற முடியவில்லையே என எரிச்சலும் புகைச்சலும் அடைந்திருத்தல்......என்று பல்வேறு நிலையினர் இருக்கின்றனர். இவர்கள் அனைவரிடமும் முதற்கண் எமது வருத்தத்தையும், ஆழ்ந்த பரிகார நோக்குடைய மன்னிப்பையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். யாம் இதைத்தவிர வேறு வழியில்லை. அனைவரும் எமது அன்புக்கும், பற்றுக்கும், பாசத்துக்கும், மதிப்பிற்கும், வாரிசு நிலைக்கும் உரியவர்கள்தான். யாம், எல்லோரையுமே உலகியல் கடந்து; எந்தப் பீடாதிபதியுமே

செயல்படாத அளவு அச்ச கூச்ச இச்சை மாச்சரிய நிலைகளை வென்று எமது உரிமை வாரிசுகளாக்கவே முயலுகிறோம். ஆனால், ஏறத்தாழப் பெரும்பாலானவர்கள் தங்கள் தங்களின் சொந்த விருப்பு, வெறுப்பு கற்பனை, கருத்து, சூழல்...... முதலியவை களுக்கேற்ப எமக்குத் தொடர்ந்து சிறிய பெரிய தோல்விகளையும், சோதனைகளையும், வேதனைகளையும் நல்கிடுகிறார்கள். ஆனால், யாமோ மகிழ்ச்சி மிகுந்த நிதானத் தோடும், அமைதியோடும் அனைத்தையுமே எமது சோதனை முயற்சிகளின் சாதனைப் பட்டியலில் குறித்து வைத்து; எமது வாழ்கையைச் சுவைமிக்க வரலாறாகவும், இலக்கியமாகவும் வளர்த்து வருகிறோம்.

இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து. நம்மவர்கள் அன்பு கூர்ந்து. தங்களுடைய வெற்றி தோல்விகளுக்காகத் தங்களின் தலைவர், வழிகாட்டி, வழித் துணை...... என்ற நிலையிலிருக்கும் குருதேவரிடம் வருத்தப்பட வேண்டாம் என்ற வேண்டுகோளை மட்டும் விடுத்துக் கொள்ளுகின்றோம். எமது வாழ்வின் குறிப்பிட்ட நாட்கள். குறிப்பிட்ட நொடிகள்.....பல பெரிய பெரிய வீரகாவியங்களாகும் தன்மை யினையுடையவை. பாரத காலக் கண்ணனை விட; யாம், எமது கொள்கை, குறிக்கோள் செயல்திட்டம்... முதலியவைகளுக்காகவே வாழுகின்றோம் என்பதைப் புரிந்து கொண்ட பலர் நம்மிடையே இருக்கிறார்கள். அந்த நல்லவர்கள், யாம், மானுட வியல் கடந்தும், உலகவியல் கடந்தும் இரவு பகலாகப் பாடுபட்டுக் கொண்டே இருப்பதால் தான் அருளுலகச் சாதனைகள் மிகுந்து எதிர்பார்ப்புக்கு அதிகமாகவே அருளாட்சி அமைப்புப் பணி எண்ணற்ற வெற்றிகளைப் பெற்று வருகிறது என்ற பேருண்மைக்கு என்றென்றும் சான்றாகவும், ஊன்றாகவும் இருப்பார்கள் என்ற நம்பிக்கையிலேயே நிறைவு காணுகிறோம். அனைவரும் ஒற்றுமையுடனும் ஒருமைப்பாட்டுடனும் தலைமைக்குக் கட்டுப்பட்டுச் செயல்பட்டிடல் வேண்டு மென்ற வேண்டுகோளை விடுத்து இம்முன்னுரையை நிறைவு செய்கிறோம் யாம்.

நம்மை. மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப் பற்று, பண்பாட்டுப் பற்று, மதப்பற்று,......முதலியவைகள் ஒற்றுமைப்படுத்தும்! ஒருமைப் படுத்தும்! அருளாட்சி அமைக்கச் செய்யும்.

ஓம் திருச்சிற்றம்பலம்

**இந்துமதத் தந்தை**
**பதினெண் சித்தர் பீடம், மடம்**
**குருமகா சன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்**
**நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர்**
**அருளாட்சி நாயகம், ஞானாச்சாரியார்**

# அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் வாசகம்

''வற்று அருளூற்றின் மருங்கமைந்த இனிய
நற்றவக் கனிமலர்ச் சோலையாய இந்துமதம்
பெற்ற குழந்தையாம் செந்தமிழர் அன்னையை
விற்றும் மாற்றார்க் கடிமையுறுத்தியும் இழிந்தனரே
பெற்றவரைப் பேணாப் பழியேயிவர் அழிவானது
கற்றார் இந்துமதத் துறையெல்லாம் குருவாவதில்லை
வேற்றார் மாற்றார் போற்றிக் குருவை ஏற்றார்
இற்றார் நற்றமிழர் அற்றார் பாரம்பரிய வீரியம்
உற்றதுணர்ந்து இவர் திருந்த உழைப்போம்
கற்பிக்கக் குருபாரம்பரிய முண்டு
கதிரவனால் காரிருள் அகன்றிடும்.''

—குருமகா சன்னிதானம்
ஞாலகுரு சித்தர் கருவூரார்.

---

## மறுப்பும் விளக்கமும்

மே மாத ''தர்மச்சுடர்'' இதழ் பக்கம் 31 இல் 'முத்தீ வணக்கம்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள கருத்திற்கு மறுப்பும் திருத்தமும்;

மேலே குறிப்பிட்ட கட்டுரையில் கொடிநிலை = சூரியன்; கந்தழி = அக்கினி; வள்ளி = திங்கள் என்று விளக்கி முச்சுடர் வழிபாடு எனக் கூறியுள்ளனர்.

இது தவறு. பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதப் படி கொடிநிலை கந்தழி, வள்ளி எனும் முத்தீ ஓம்பல் உண்டு. இது முத்தீ வணக்கம் ஆகாது. வணக்கம் என்பது வேறு; ஓம்பல் என்பது வேறு. இந்த இடத்தில் முத்தீ ஓம்பல் என்று கூறுவதுதான் சரி.

மேலும், கொடிநிலை என்பது விண்மீன் வழிபாடு. சூரியன் வழிபாடு அல்ல. இது விடிகாலை வேளையில் நிகழ்த்தப்பட வேண்டிய ஒன்று எனவும்; இதை எப்படிச் செய்ய வேண்டும் என்ற விதிமுறைகளையும் 'தீவாளி வழிபாடு' என்ற அறிவிக்கை -யில் கூறியிருக்கிறது எங்களுடைய இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

இதேபோல், கந்தழி என்பது சூரியன் வழிபாடு; வள்ளி என்பது திங்கள் வழிபாடு.

பதினெண் சித்தர்கள் தங்களுடைய சீவநெறியான மெய்யான இந்து மதத்தில் எதையும் முறைபடுத்தியே விதிகளை வகுத்துள்ளார்கள் என்பதற்குச் சான்றே; இந்தக் கொடிநிலை, கந்தழி, வள்ளி எனும் முத்தீ ஓம்பல். அதாவது, மிக நெடிய தொலைவில் விண்மீன்கள் இருப்பதால் அதற்குரிய கொடிநிலை வழிபாடு முதலிலும்; பின்னர், சற்று அருகில் உள்ள சூரியனுக்கு உரிய கந்தழி அடுத்ததாகவும் மிக அருகிலுள்ள சந்திரனுக்குரிய திங்கள் வழிபாடாகிய வள்ளி மூன்றாவதாகவும் பதினெண் சித்தர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

# அன்புள்ள சேவுகனுக்கு..........!

அன்புச் சேவுக!

இதற்காகத்தான், பதினெண் சித்தர் பீடாதிபதிகளும்; அவர்களின் கருவழி, குருவழி, விந்துவழி வாரிசுகளும்; அரசு குடும்பத்தினர்களுக்கு குருமார்களாக, குருக்கள்களாக...... இருந்து வந்துள்ளனர். நமது மக்கள் போலியான அரசியல் -வாதிகளின் கோரப்பிடியிலிருந்து தப்பிக்க முடியாத காலகட்டங்களில்; மதவாதி -களின் அரசியல் தலையீடு அவசியமே

ஏனெனில், இந்திய விடுதலைக்கு பிறகு; அரசியல்வாதிகள், 'இந்திய விடுதலையே மதத்தின் பெயரால்தான் மக்கள் சக்தியை ஒன்று திரட்டிப் பெறப்பட்ட ஒன்று' —என்ற பேருண்மையை மறந்தும் துறந்தும் செயல்பட ஆரம்பித்திட்டார்கள் குறிப்பாக, இவர்கள், 'ஏறிவந்த ஏணியையே எட்டி உதைப்பது போலத் தங்களின் வெற்றிக்குக் காரணமாக இருந்த இந்து மதத்தின் ஒற்றுமையையும், உரிமையையும், பெருமையையும், பாரம்பரியங்களையும், நிறுவனங் -களையும், மதத்தலைவர்களையும், மதப்பேரறிஞர்களையும், மதஇலக்கியங்களையும், மதநிகழ்ச்சிகளையும், மதச்சின்னங்களையும்..... சிதைக்க, சீரழிக்க, இழித்துரைக்க, பழித்துரைக்க, கேலி செய்ய, கிண்டல் செய்ய, அன்னியர்கள் சூறை . தேவையான வாய்ப்பு வசதிகளை வழங்கி வந்துள்ளார்கள்.

நண்ப! ஒழுக்கமோ, நேர்மையோ, நீதியோ, கட்டுப்பாடோ, உண்மை -யோ...... இல்லாதவர்களாகவே வாழுபவர்கள்தான்; பெரும்பாலும், அரசியல் துறையில் இருக்கின்றார்கள் அவர்கள், நற்பண்புகளில் சிறந்த மதத்துறையினர் என்றாவது ஒருநாள் அரசியல் துறையைப் பிடித்துக் கொள்ள நேரிடுமோ என்றஞ்ச ஆரம்பித்திட்டார்கள். அதனால்தான், மக்களுக்கு மதத்துறையில் பற்றோ, பாசமோ, மதிப்போ ஏற்பட்டுவிடாமல் இருக்கும்வண்ணம் பார்த்துக் கொள்கின்றார்கள். இதற்காக, அன்னிய மதங்களைக் கொண்டு இந்து மதத்தின் சிறப்பையும், செல் -வாக்கையும் தாக்கித் தகர்த்துத் தரைமட்டமாக்கி வருகின்றார்கள். இந்தமுயற்சியில், எல்லா அரசியல்வாதிகளும் ஒருமித்த கருத்தினராய் ஒற்றுமையோடு செயல்படு -கின்றார்கள். அதாவது, மேடைப்பேச்சு எழுத்து, நாடகம், திரைப்படம் அனைத்திலும இந்துமதத் தத்துவத்தையும், செயல்முறைகளையும், தலைவர்களையும், அருளாளர்களை யும் இழிவு படுத்துவது, கிண்டல் செய்வது, கேலிபண்ணுவது என்பது மிகமிகச் சாதாரணமாகிவிட்டது. அத்துடன், எப்போதாவது ஏதாவது ஒரு சாமியார் ஒரு சின்னத்தவறை, ஒரு சின்னக் குற்றத்தைச் செய்தால் கூட அதை மிகப் பெரிய அளவில் விளம்பரப்படுத்தி, தரககுறைவாக விமரிசனம் செய்வது மரபாகி விட்டது. அதேநேரத்தில், அரசியல்வாதிகள் செய்யும் கொலை, கொள்ளை, கையூட்டு, ஏமாற்றல், சுரண்டல், அதிகார முறைகேடு...... முதலிய தவறுகள் மிகமிகச் சாதாரணமாக மலிந்து நிறைந்து கிடக்கின்றன. 'இவைதான், அரசியல்வாதிகளின் இலக்கணங்கள் அல்லது வாழ்வியல் நடைமுறைகள் என்று நம்பி, விரும்பி மக்கள் ஏற்குமாறு செய்து விட்டனர். அதனால்தான் பெரும்பாலான அரசியல்வாதிகள்; பகுத்தறிவுவாதிகளாகவும், சீர்திருத்தவாதிகளாகவும், மத மறுப்பாளர்களாகவும் வேடமிட்டுக் கொண்டு வாழ்கின்றார்கள் அதாவது, மதவாதி -யாக அல்லாதவன் எந்தத் தவறையும் செய்யலாம் அல்லது எந்தக் குற்றத்தையும் செய்யலாம் என்ற ஒரு தவறான நீதிக் கருத்துக்களை உண்டாக்கி விட்டனர். எனவே தான், இவர்கள், மதவாதிகள் அரசியலுக்கு வரவேக்கூடாது என்கின்றனர். இன்னும் சொல்லப்போனால், இந்துமத நிறுவனங்களும், நிர்வாகங்களும் மதத்தை வளர்க்கவே கூடாது என்று சொல்கின்றார்கள்.

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

# ஐந்தொழில் வல்லான் நிலை-5

1. தென்கிழக்குதிசை, 2. தென்மேற்குதிசை, 3. வடமேற்குதிசை என்ற மூன்று திசைகளையும் நோக்கியிருக்கும் நடராசர் சிலை; என்னென்ன நிறத்திலிருக்க வேண்டும் என்பதும், என்னென்ன பொருள்களால் செய்யப்பட வேண்டுமென்பதும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளைத் தவிர வேறுயாரும் அறிந்து கொள்ளக்கூடாது என்ற சட்டதிட்டக் கட்டுபாட்டை மட்டும் ஏற்றுக் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. ஏனென்றால், இந்தப் பேருண்மையைத் தெரிந்து கொண்டவர்கள்; அசுரசத்திபெற்ற -வர்களாகவும் மாறி மிகப் பெரிய அழிவு சத்திகளாகிடுவார்கள் இதில், ஐயமே இல்லை! ஐயமேஇல்லை! ஐயமேஇல்லை! ஏனெனில், அருளாட்சி நாயகம் ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்களுக்கு மேலேகுறித்த பேருண்மையின் அடிப்படையில் எண்ணற்ற கடுமையான, கொடுமையான தோல்வி அனுபவங்கள் உண்டு. அதாவது, இவர் உருவாக்கியவர்களில் கணக்கற்றோர்; கண்ணற்றவர்களாக, கருத் தற்றவர்களாக, குறுகிய சுயநலவெறியர்களாக, பேராசைக்காரர்களாக, அரக்க மனம் உள்ளவராக, மந்திரவாதித் தொழில் செய்வோராக, குருமொழி கேளாச் சீடர்களாக மாறியிருக்கிறார்கள், மாறியிருக்கிறார்கள், மாறியிருக்கிறார்கள்.

இன்றும் கூட, இவரால் உருவாக்கப்பட்டவர்களில் கணிசமான அளவினர்; பணம், பதவி, புகழ், அதிகாரம், ஆணவம், அகம்பாவம், வீம்பு, முரட்டுப் பிடிவாதம்...... முதலியவைகளால் வீணாகித் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே தான், மிகப்பெரிய, அரிய, உரிய சத்திகளைத் தரக்கூடிய பேருண்மைகளையெல்லாம் பாரம்பரிய மரபுப்படியும், விதிப்படியும் சட்டதிட்டக் கட்டுப்பாட்டுப்படியும் வெளியிடாமல் மறைத்து வைக்கும் செயலை அருட்கொடை வள்ளலே செய்ய நேரிட்டுவிட்டது. இதைவிட வேறு வழியே இல்லை. அதாவது, எல்லாக் காலங்களிலுமே குருமொழிக் கேளாதவர்கள்; குருவிடமிருந்து விலகியும், ஒதுங்கியும், பதுங்கியும், மறைந்தும் செயல்படக் கூடியவர்கள்; குருவை மறந்தும், துறந்தும் செயல்படக் கூடியவர்கள், குருவை ஏமாற்றியும், தூற்றியும் செயல்படக் கூடியவர்கள்...... என்போர்கள் தோன்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதனை அநுபவத்தால் உணர்ந்துதான் அருளாட்சிநாயகம், அரசயோகி அடிக்கடி ஆமை -யாகவும், ஊமையாகவும், இலைமறைகாயாகவும் வாழநேரிட்டுவிடுகின்றது.

மேற்படி நடராசர் சிலை; ஒவ்வொரு திசைக்கும் ஏற்ப ஒவ்வொரு வகையான பலிபொருளைப் படையலாகப் பெறுகின்றது. பொதுவாக, எல்லா நடராசர் நிலையும் பச்சைக்குருதியால் நீராட்டப்பட்டுத்தான் புத்துயிர்ப்புச் செய்யப்படல் வேண்டும். சிறப்பாக, வெள்ளாட்டின் குருதி பயன்படுத்தப்படல் மரபு. ஆனால், பறவைகள், மீன் விலங்குகள் முதலியவற்றின் குருதியால் நீராட்டப்படுதல் சிறப்பாகும்.

(I) வடகிழக்கு திசையை நோக்கியிருக்கும் நடராசருக்கு நெய்அடிசில், சமைக் -கப்பட்ட இறைச்சியுணவும் படையலாகும்.

(II) கிழக்குதிசையை நோக்கியிருக்கும் நடராசர் சிலைக்கு தயிர்அடிசில், சுட்ட இறைச்சியுணவும் படையலாகும்.

(III) தெற்கு திசையை நோக்கியிருக்கும் நடராசர் சிலைக்கு எள் அடிசிலும், வேகவைத்த இறைச்சியும் படையலாகும்.

(IV) மேற்கு திசையை நோக்கியிருக்கும் நடராசர் சிலைக்கு சர்க்கரை அடிசிலும் பச்சை இறைச்சியும் படையலாகும்.

(V) வடக்கு திசையை நோக்கியிருக்கும் நடராசர் சிலைக்கு பால் அடிசிலும், குருதிப் பொரியலும் படையலாகும்.

இந்த ஐந்தையும் சித்தி செய்து கொள்வதற்கு நெல், பஞ்சர், பூ, வில்வ இலை (அல்லது ஆலிலை, அரச இலை, பலா இலை முதலிய மூன்று மர இலையும் பயன்படுத்தப்படலாம்) எனும் நான்கில் அருட்சினை செய்ய வேண்டும். மற்ற மூன்று திசைகளுக்கும் உரிய நடராசர்களுக்கு என்னென்ன படையல் பொருள்? அருட்சினை பொருள்? என்பதை வெளியிட முடியாததற்கு வருந்துகிறார், குருதேவர்.

—முற்றும்

---

# தமிழின விடுதலைப் போர்

# சந்தாஞச்சாரியார் வரலாறு = மெய்யான இந்துமத வரலாறு

(நூல் விளக்கம் = நூல் அறிமுகம்)

தமிழின விடுதலைப் போர்த் தளபதிகளே சமயாச்சாரியார்களும், சந்தாஞச்சாரியார்களும் ஆவார்கள் இப்படையிலுள்ள துணைச் சேனைத் தலைவர்களே, நாயன்மார்களும் ஆழ்வார்களும். இவர்களின் போாக்கருவிகளே, இவர்கள் பாடிய பாடல்கள், அல்லது படைத்த இலக்கியங்கள். இவர்களுடைய பாடிவீடுகளே, இவர்கள் தனித்தனியாகப் பூசை செய்த, இவர்களின் விருப்பத்திற்குரிய தெய்வங்களின் கோயில்கள். இந்த மாபெரும் விடுதலைப் போருக்காக உருவாக்கப்பட்ட பாசறைகளே அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்கள் இந்த விடுதலைப் போருக்காக வகுக்கப்பட்ட வியூகச் சாத்திரங்களும், அத்திர சாத்திரங்களும்தான், குலதெய்வக் கோயில் முதல் மிகப்பெரிய ஆலயங்கள், திருப்பதிகள் முடிய நிகழக் கூடிய விழாக்களும், பூசைகளும். தமிழினத் தத்துவ வேந்தர்களான பதினெண் சித்தர் பீடாதிபதிகளே முடிசூடிய அரியாசன மாமன்னர்கள் என்பதால்; அவர்கள் தோன்றும் காலங்களிலேதான் தமிழின விடுதலைப் போர் நிகழுகிறது. இம்மண்ணுலகில் மூலவர்களாகவும், முதல்வர்களாகவும், தலைவர்களாகவும் தத்துவ நாயகர்களாகவும், மதத்துறையின் விதைப்பண்ணைகளாகவும் இருக்கின்ற தமிழர்கள்; விழிப்புணர்வும், தன்னுணர்வும், இன உணர்வும், மொழி உணர்வும் இல்லாத காரணத்தினால் மீண்டும் மீண்டும் அடிமைப்பட்டு 48 முறைகள் விடுவிக்கப்படுவார்கள் என்று குருபாரம்பரியம் கூறுகின்றது. ஆனால், இவர்கள் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி காலத்திலேயே முழுமையான விடுதலையைப் பெற்று விடுவார்களேயானால்; அந்த விடுதலையைப் போற்றிப் பேணி வளர்ப்பவர்களாகத்தான் மற்ற (முப்பத்தாறு) 36 பதினெண் சித்தர் பீடாதிபதிகளும் இருந்திடுவார்கள் என்ற செய்தியையும் குருபாரம்பரியம் குறிக்கின்றது. எனவேதான், சித்தர் காகபுசுண்டர் எனப்படும் காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளையாகிய யாம்; பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி நிதானத்தோடும், சமாதானப் போக்கோடும் 'எண்ணப் புரட்சி', 'கருத்துப் புரட்சி', 'சிந்தனைப் புரட்சி',......என்று உணர்வுப் புரட்சிகளைச் செய்து தமிழின விடுதலைப் போரை நிகழ்த்துவதற்காகத்தான் 'தமிழின விடுதலைப் போர்' தலைப்பில் பல நூல்களை எழுதியிருக்கிறோம். அதில் ஒன்றே இந்நூல்.''

['மெய்யான இந்து மதம் காத்த கருவூர்த்தேவர் வரலாறு' அல்லது 'சந்தாஞச்சாரியார் வரலாறு' = மெய்யான இந்துமத வரலாறு என்ற நூலுக்கு எழுதப்பட்ட முன்னுரையிலிருந்து எடுக்கப்பட்டது]

அன்புச் சேவுக! பக்கம் 8-ன் தொடர்ச்சி

ஆனால், இந்த அரசியல்வாதிகள் அன்னிய மதங்களுக்கு அளவற்ற மதிப்பும், செல்வாக்கும், சலுகையும் வாரிவாரி வழங்கிக் கொண்டே இருக்கின்றார்கள் அதாவது, இந்த அன்னிய மதத்தவர்களின் ஆதரவு (வாக்குச் சீட்டு = vote) தங்களுக்கு அரசியலில் என்றென்றும் தேவை எனபதற்காகவே; இப்படி, அன்னிய மதத்தவர்களை ஆதரிக்கின்றார்கள். அதே நேரத்தில் இந்தியாவுக்குரிய மதங்கள் வளர்ந்தாலோ, வலிமைப் பெற்றாலோ தங்களுக்கு ஆபத்து என்று நினைக்கின்றார்கள். எனவே, ''மதத்துக்குட்பட்டது அரசா? அரசுக்கு உட்பட்டது மதமா?'' -என்பதை இந்த நூற்றாண்டு விரைவில் தீர்மானிக்க வேண்டும். அதற்கு மக்களை பக்குவப்படுத்தும் மாபெரும் முயற்சியில்தான் கடந்த இருநூறு ஆண்டுகளாக இ.ம.இ. பாடுபட்டு வருகின்றது.

இ.ம.இ. யின் இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட முயற்சியின் உச்சகட்ட நிகழ்ச்சியாகவே இப்பொழுதைய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தமிழர்கள் அனைவரும் குருபாரம்பரியம் கூறுகின்ற மூன்று வகையான அமைப்புக்களின் கீழ் செயல் படத்தயாராக இருக்க வேண்டுகின்றேன். 1. தமிழின விடுதலை இயக்கம், 2. தமிழ் மொழி விடுதலை இயக்கம், 3. தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இந்த மூன்று இயக்கங் -கள் உருவாக்கும் முக்கோண அரணுடைய நகர்தான் அருளாட்சித் திருநகராக இருக்கும். அந்நகர்தான், 'அரசியலுக்கு உட்பட்டது மதமா? மதத்துக்கு உட்பட்டது அரசியலா?' என்பதை நிர்ணயிக்கும். இந்த நிர்ணயிப்பின் கருத்தலைகள், செயலலைகள் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பரவியே தீரும். பிறகு உலகு முழுவதும் பரவியே தீரும்.

அன்பு,

★ ★ ★ ஞாலகுரு சித்தர் கருவூரார்

---

# ஞானம் வழங்கும் ஆச்சாரிய நிலை-2

(1) அருள் சினையாவதற்காகச் செய்யப்படுவது அருட்சினை

(2) பூவினால் செய்யப்படுவது பூசை

(3) நெய்யினால் செய்யப்பட்டுப் படைக்கப்படுவது நெய்வேத்தியம்.

(4) சாத்து + திறம் —> சாத்திறம்

குறிப்பு:- இவை போல் குறிப்பிடத்தக்க சொற்கள் ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு ''குருதேவர்'' அறிக்கையில் ஏற்கனவே வெளியிடப்பட்டிருக்கின்றன.

3. அருள் வழங்கு நிலைகளில் ஞானத்தை வாய்திறந்து சொற்களின் மூலம் வெளிப் படுத்துவதில்லை. பீடத்தில் அமர்ந்து அரை இமைமூடி விரல் அசைவுகளில் தவநிலை -யிலிருந்து ஞானத்தைக் கொடையாக வழங்குகின்ற நிலைதான் இந்த அருள் வழங்கு நிலை.

**சிறப்புக் குறிப்பு:-** குரு, குருமார், குருக்கள், பூசாரி என்ற நான்கு நிலையினர் ஆசிரியராக இருந்து ஞானத்தை வழங்குவதில் பல்வகைகளும், பல நிலைகளும் உண்டு. இவையனைத்தும் மறைபொருள்களாகவே! காக்கப்படுகின்றன ஞானாச்சாரியார், ஞானவள்ளல் ஞானத்தந்தை, இந்து மதத்தந்தை, இராசிவட்டநிறைவுடையார், அரசயோகி, அருளாட்சி நாயகம், அருட்கோட்டை வள்ளல், அண்ட பேரண்ட ஆதி சத்திகள் சன்னிதானம் என்ற நிலையில் இன்றைய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் செயல்படுவதால்தான் ஒகாசன நிலைகள் ஆறினை உலகிற்கு வெளிப் படுத்தியுள்ளார். (இந்த ஆறுநிலைகளை புகைப்படம் எடுத்துள்ளார் சிலையாகச் செதுக் குவதற்கும், ஒவியமாக வரைவதற்கும் அனுமதி வழங்கியுள்ளார்.) எனவே, இதனுடைய முழுமையான தத்துவ விளக்கத்தை, நேரில்தான் குருவழியாக உணர வேண்டும்.

4. ஆடலவல்லான் சிலை, பிச்சாடனர் சிலை, இத்த ஞானம் வழங்கு ஆச்சாறிய நிலை, அம்மையப்பர் நிலை, திருக்குடும்ப நிலை... என்று இந்துமதத்தின் முழுமுதற் பரம் பொருளான அல்லது தலைவனை (பதினெண் சித்தர்களின் தலைவனை) சீவன் என்னும் சிவனின் குறிப்பிடத்தக்க சில தோற்ற நிலைகள் உண்டு. இவையே, அருளை அநுபவப் பொருளாகப் பெற விரும்புகின்றவர்களுக்கு எளிதில் பயன்படக் கூடிய அருளூற்றுக்களாகும். அதாவது, மேற்படி சிவனின் அருள்வழங்கு தோற்ற நிலை -களில் எதை வணங்கி வழிபட்டாலும் எளிதில் அருள் சித்தியாகும் என்று குருபாரம்பரியம் கூறுகிறது.

5. ஞானம் வழங்கு ஆச்சாரிய நிலை எனப்படும் இந்தச் சிலையின் தோற்றம் தான்; பீடாதிபதியாக இருப்பவர்கள் பொறுப்போடும் பொறுமையோடும், அடக்கத் தோடும் அமைதியோடும், நிதானத்தோடும் சமாதானத்தோடும், பணிவோடும் துணிவோடும், உலகியலில் கலந்து மக்களுக்கு அருளை விருந்தாகவும் மருந்தாகவும் வழங்கிடுமாறு குருவுரை பகர்கின்றது. அதாவது, சித்து விளையாடல்களால் பெரும் கூட்டத்தையும், பெரும் பொருளையும், புகழையும் சேர்த்து தங்களுக்குக் கிடைத்த ஞானச் சுடரிலேயே மாளும் விட்டில் பூச்சியாக வாழ்ந்து சென்றிடாமல்; தத்துவ நாயகமாக நெடிய பெரிய உணர்ச்சியினை ஆல்போல் பெற்றிட வேண்டும் பீடாதிபதி என்றும் குருவுரை பகர்கின்றது மேற்படித் தோற்றம்......'' இந்தக் குருபாரம்பரியச் செய்திக்கு விளக்கமாகப் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, நிறையகரூர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்; தமது அடியான், அடியாள், அடியார், ஆர்வலர், ஆதரவாளர், விருப்பாளர் ஏந்தாளர்......முதலியவர்களுக்கு அருள்நிலை விளக்கம் வழங்கிட வழங்கியுள்ள ஆறு ஒகாசன நிலைத் தோற்றங்களில் இது 2-வது ஒகாசன நிலைத் தோற்றமாகும். இதற்குப் பெயர் தென்றிசை அருட் தலைமை நிலை.

---

# பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்...

1. அறியரண் --> அறி + அரண்

 அறி — அனைத்தையும் அறிந்தவன் = சிவன்

 அரண் — காவல் செய்யும் கோட்டை போன்று காப்பவன் = மாயோன் (பெருமால்)

# புரட்சி மயங்கக் கூடாது - 8

—ஞாலகுரு சித்தர் கருவூரர்

எனவே நமது இயக்கத்தின் வேண்டுகோள்களாக ஆட்சியாளரிடம் கேட்ப தெல்லாம் கீழ்கண்டவைகள் அன்றி வேறல்ல. நாமே புரட்சி செய்து ஆட்சியைப் பிடித்து செய்யவேண்டும் என்பது நமது நோக்கமல்ல; இவைகளை யார் செய்வதாகக் கூறினாலும் ஏற்கத் தயார் என்றே கூறுகின்றோம்.

''நாடோடிகள் இல்லாமல் செய்க''
''பிச்சைக்காரர்கள் இல்லாமல் செய்க''
''அனைத்து வகையான சுரண்டல்களும் தடுத்திட ஆவன செய்ய வேண்டும்''
''விலைவாசி ஏற்றத்தை இல்லாமல் செய்க''
''கள்ளச் சந்தையை இல்லாமல் செய்க''
''அனைத்துத் தொழில்களையும் அரசுடமையாக்குக''
''வேலையில்லாத் திண்டாட்டத்தை இல்லாமல் செய்க''
''நடைபாதையோரத்தில் வாழும் பாமரப் பாட்டாளிகள் இல்லாமல் செய்க''
''பட்டினி கிடப்போர் இல்லாமல் செய்க''
''அனாதைகளை இல்லாமல் செய்க''
''வறுமையை இல்லாமல் செய்க''
''சிறுவர்கள் உழைக்காமல் கல்வி கற்கச் செய்க''
''அரசியல், கலை, இலக்கியம், சமுதாயம் முதலியவற்றின் பெயரால் அனாவசிய ஆடம்பர விழாக்கள் இல்லாமல் செய்க''
''ஆண்டவன் முன்னால் அனைவரும் சமம் என்பதுபோல் ஆளுபவர் முன்னால் அனைவரும் சமம் என்று செய்க''
''சமுதாய சமத்துவத்தைச் செயலில் செய்க''
''உழைக்காமல் உண்டு கொழுப்போர் இல்லாமல் செய்க''
''உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்க வழி செய்க''
''மாணவர் விருப்பாற்றலுக்கேற்ப கல்வி கற்க வசதி செய்க''
''மனம் ஒத்தவர் திருமணம் செய்துவாழ உத்திரவாதம் செய்க''
''சர்வாதிகாரப் போக்குகளை முளையவிடாமல் செய்க''
''குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு அரசுடையது என்பதனை அறிவிப்பு செய்க'
' சமுதாய நலவிரோதச் செயல்களைத் தண்டித்திடுக''
''சமுதாய நலத் துரோகச் செயல்களைத் தண்டித்திடுக''
''ஆட்சியதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துபவர்களைத் திருத்த, கண்டிக்க, மாற்ற, தடுக்க சட்டப்படி வழிவகைகள் செய்க''
''அனைத்து மக்களின் அமைதிக்கும் நிம்மதிக்கும் நிறைவுக்கும் வழி செய்க''
''உழைக்கும் வர்க்கத்தின் பிழைப்புக்கு உத்திரவாதம் செய்க''
''கல்வியில் உண்மைத் தன்மையை உண்டாக்குக''
''கல்விக்கும் உலகியல் நடைமுறைக்கும் உறவை உண்டாக்குக''
''உடனடியாகக் கல்விக் கூடங்களை பொதுவுடமையாக்குக''
'அரசே புதிய தொழில்களையும், பண்ணைகளையும் தொடங்க வேண்டும்!''
''அரசே சமுதாய புரட்சியும், அரசியல் புரட்சியும் ஒரே சமயத்தில் நிகழ்த்திட ஆவன செய்ய வேண்டும்''

என்றிப்படிமுழங்குகின்றேப் நாம். நாம் புதுமை விரும்பிகள்தான். ஆனல்புரட்சிவிரும்பி -கள் அல்ல. இருப்பினும் புரட்சியால்தான் புதுமைகள் விளைவிக்கப்பட முடியும் என்ற உண்மை வலுப்படுமேயானல்; பொதுமக்கள் பெருந்திரளினர் வெகுண்டெழுந்து அப் புரட்சியைச் செய்யுமாறு செய்பவர்களாகவே இருப்போம் நாம். அதனல் நாளைய இளைய தலைமுறை எப்படியெப்படி புரட்சி செய்யவேண்டும் என்ற தத்துவ விளக்கத்தை முறையாகவும், முழுமையாகவும் ஏட்டில் எழுதிக் காட்டிச் செல்ல வேண்டிய கடமை இருக்கிறது இக்கடமையைத்தான் என் தந்தை என்னிடம் அடிக்கடி ''......உன்னு -டைய ஒவ்வொரு சொல்லும், செயலும், நினைவும், கனவும் 'புரட்சி மயங்கக் கூடாது என்ற குறிகோளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்'' என்று கூறினர். அவருடைய சொற்கள் என்செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக் -கின்றன. அதனல்தான் உனக்கு '**அருட்பணி விரிவாக்க மடல்**' எழுத உட் -கார்ந்த நான் 'புரட்சி மயங்கக் கூடாது' என்று தலைப்பிட்ட கட்டுரை அஞ்சலை எழுதி முடித்துள்ளேன்.

மதுரை வட்டாரத்தில் உருவாக்கிட்ட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள் சித்தரடியார்கள் நெல்லிக்காய் மூட்டை சிதறி நாலாபக்கமும் நெல்லிக்காய் சிதறி கிடைப்பது போல் இருக்கிருர்கள். இந்த நிலையை உடனடியாகப் பெரும் முயற்சிகள் செய்து மாற்றிச் சீர்திருத்திச் செப்பனிட வேண்டும். அத்துடன் முடிந்தவரை அதாவது, வாரம் ஒருமுறையாவது சித்தர்நெறிச் செல்வர்கள் ஒன்றுகூடி கொள்கை விளக்கமும், குறிக்கோள் விளக்கமும், செயல்திட்ட விளக்கமும் பற்றி கலந்து உரையாடிடல் வேண்டும். அத்துடன் முடிந்தவரை மதுரை மாநகருக்குள்ளே -யும், அதன் சுற்று வட்டாரத்திற்குள்ளேயும் 'ஞானக்கொடி' ஏற்றுதல், அறிவார்ந்த அருளுரை வழங்குதல், இந்து மறுமலர்ச்சி இயக்கக் கிளைகளை ஆரம்பித்தல், தனி மனிதர்களை அருட் செல்வர்களாக ஆக்குதல், கோயில்களுக்குப் புத்துயிர்ப்பு செய்தல் முதலிய பணிகளைச் செய்வது நிகழ்தல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் சமய எழுச்சியையும், சமுதாயப் புரட்சியையும், அரசியல் மறுமலர்ச்சியையும், கலை வளர்ச்சி -யையும், உண்மையான பண்பாட்டுப் புரட்சியையும், சமுதாய சமத்துவத்தையும், அரசியல் சமத்துவத்தையும் கருவாக்கி உருவாக்கிடும் பணியைத் துவக்கியவர்களா -வோம். இல்லாவிட்டால் '**புரட்சி மயங்கக் கூடாது**' என்ற சித்தர் நெறியைச் சிறுகச் சிறுகக் கொன்றவர்கள் ஆவோம். நாம் மதவழிப் புரட்சிக்கு நாட்டைத் தயார் செய்யாவிட்டால்; நமது வருங்கால இளைய தலைமுறை தற்கொலைகளையும், கொலை களையுமே நம்பி, விரும்பி, ஏற்றுச் சிறப்பாகச் செயல்பட்டிடும். அத்தகைய மாபெரும் சமுதாய அநீதிகளும், துரோகங்களும், விரோதங்களும், பயங்கரங்களும், அழிவு -களும், இழிவுகளும் ஏற்படாமல் முன்னேற்பாடான செயல்களைச் செய்ய வேண்டியதே நம் கடமை! கடமை! கடமை!!! இதனை உணராமல் ஏறத்தாழ எல்லா இளைஞர்களுமே சுயநலத்தோடு, குறுகிய கண்ணேட்டத்தோடு குறுக்கு வழிகளில் தங்களுடைய வாழ்க்கையை மட்டும் வளப்படுத்திக் கொள்ள முயற்சிப்பது மடமை! மடமை!! மடமை!!! என்று கூறி இவ்வஞ்சலை முடிக்கின்றேன். எனவே நீயும் நமது நண்பர் -களும் ''புரட்சி மயங்கக் கூடாது'' என்ற கொள்கையையும் குறிக்கோளையும் நிறைவேற்ற எவ்வித தயக்கமும் இல்லாமல் செயல்பட்டிடத் தாத்தாக்களும் ஆத்தாக்களும் அருள் புரிவார்களாகுக என்று கூறி இவ்வஞ்சலை நிறைவுசெய்கின்றேன்

ஓம் திருச்சிற்றம்பலம்
அன்பே சிவம்

அன்பு/

**குருமகா சன்னிதானம்**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்**



# இந்தியாவில் மார்க்சீயம்-21

—சித்தர்

இத்தகைய அடிப்படை உண்மையை நிச்சயமாக, உறுதியாக கார்ல் மார்க்சினால் பெற்றிருக்க முடியாது. என்னுடைய வாழ்க்கை தனிமனிதன் வாழ்க்கையல்ல. மனித குலம் முழுவதுமே தன்னை ஒருமுறைத் திருப்பிப் பார்த்துக் கொள்ளத்தக்க ஒன்றாகும். இவ்வளவு அடிகளையும், இடிகளையும் தாங்கி மீண்டும் சமுதாயத்திற்குள் வந்துள்ளேன் நான் என்றால் என்னுடைய தன்னல வாழ்விற்காகவல்ல; தடுக்கமுடியாத அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் சமுதாய நலந்தேடித்தான். எப்படி மார்க்சு கொடிய கொந்தளிக்கும் கடலலை போல் வறுமையும், பிணியும் வந்துற்ற போதும் அவரால் மனிதகுல நன்மைபற்றி சிந்திக்க முடிந்ததோ அவ்வாறேதான் என்னுடைய வாழ்க்கையும் உள்ளது.

மார்க்சு வகுத்துத் தந்த சிந்தனைப் பாதைதான் இன்று என்னை மூடநம்பிக்கையிலிருந்தும், அறியாமையிலிருந்தும், பிடிவாத வெறித் தன்மையிலிருந்தும் மீட்டுத் தமிழ்ச் சமுதாய நலன் நோக்கி மனித குலம் நலன் நோக்கி என்னை அயராது, அல்லல் வந்துற்றபோதும் கலங்காது உழைக்க வைக்கின்றது. மார்க்சின் சிந்தனைதான் 'சித்தர் நெறி'யின் தெய்வீகப் பயிற்சிகளையும், பயன்களையும் எல்லோரும் பெறும்படியும், புசிக்கும்படியும் வைக்கின்றது அல்லது சமுதாயத்திற்கு அஞ்சாது, கலங்காது தர முன்வர வைத்துள்ளது. என்னை மென்மேலும் பரந்து விரித்துபட்ட செயல் வீரனாகவும், மறைந்து திரிந்து கிடக்கும் தத்துவச் சுரங்கத்தை ஆர்வத்தோடும், அளப்பரிய நம்பிக்கையோடும் வாரி வாரி வழங்கிடவும் வைக்கின்றது என்பதைக் கூறிக் கொண்டு; என்னுடைய வளர்ச்சி என்னை என் தந்தை நினைத்து வளர்த்ததற்கு முரணா? என்ற வினாவை உங்களிடமே விடுகின்றேன்.

''கார்ல் மார்க்சு இறந்தவுடனேயே 'மார்க்சீயம்' என்பது காலாவதியாகிவிட்ட ஒரு தத்துவம்; அத் தத்துவம் மார்க்சின் வாழ்க்கைக் காலத்தில் இருந்த அழுத்தத்தினால் அல்லது தேவையினால் உண்டாகிய ஒன்றாகும். அந்த சூழ்நிலைகள் மாறிவிட்டன. இனி 'மார்க்சீயம்' தேவையில்லை. மார்க்சீயவாதிகள் மார்க்சைக் கடவுளாகவும் மார்க்சீயத்தைவேதமாகவும் ஆக்கி ஒரு புதிய மதத்தைதான் உருவாக்கி வருகின்றார்கள். மதம் எப்படி மயக்கத்தைத் தரும் ஒரு போதைப் பொருள் என்று மார்க்சியவாதிகளால் குற்றம் சாட்டப்பட்டதோ அதேபோல் மார்க்சீயமும் ஒருவித மயக்கத்தைத் தரும் போதைப் பொருளாகத்தான் ஆகிவிட்டது. மதம் ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டை நியாயப்படுத்தி முதலாளித்துவம் சுரண்டலுக்கு ஒப்புதலும் சம்மதமும் வழங்கியது போல; மார்க்சீயம் தொழிலாளி - முதலாளி என்ற வேறுபாட்டை நியாயப்படுத்தி இரண்டு பேருக்கிடையிய் பகையும், சண்டைச் சச்சரவுகளையும் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஒப்புதல் அளிக்கின்றது. அதாவது முன்பு மதத்தால்தான் சமுதாய அமைதி குலைகிறது என்ற குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் இன்றைய நிலையில் மார்க்சீயத்தால்தான் அமைதியும் ஒற்றுமையும் குலைக்கப்படுகின்றது. மார்க்சீயத்தைத் தொடர்ந்து வாழ அனுமதித்தால் தொழிலாளி - முதலாளி உறவுகளும் உரிமைகளும் தொடர்ந்து முறிவுக்கும், நெரிசலுக்கும், நலிவுக்கும் அழிவுக்கும் உள்ளாகி உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டுப் பொருளாதார

முன்னேற்றமும் சமுதாயமுன்னேற்றமும் தேக்கம் பெற்றுவிடும். மார்க்சியம் எனது பாட்டாளி வர்க்க உரிமைக்காகப் போரிட்டேத் தீரவேண்டும் என்று கூறுகின்றது. அதே நேரத்தில் போர் முதலாளித்துவச் சுரண்டலுக்கு வழி வகை செய்கின்றது என்று போரை குறை சொல்லுகின்றது இக்குழப்பவாதத்தின் எல்லை பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசுதான் உலகில் சமாதான சகவாழ்வை உருவாக்கும் என்ற கருத்து மகர்க்சீயத்தில் கூறப்பட்டிருக்கின்றது. எனவே மார்க்சியம் பயனற்-றது மட்டுமல்ல தேவையற்றதும் ஆகும். மார்க்சியத்தால் எந்த குறைகளும், குழப்பங்களும், தேக்கங்களும், முடக்கங்களும் சுரண்டல்களும்..... தீர்க்கப்படப் போவதேயில்லை. மார்க்சியம சொல்லுகின்ற பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசு என்பது மதவாதிகள் சொல்லுகின்றன சொர்க்கத்தைவிட மோசமானது; நம்ப முடியாதது. மார்க்சியத்தின் பெயரால் ஆங்காங்கே உள்ள விரோதச் சத்திகள், தீய சத்திகள், வெறிநிறைந்த சத்திகள், கொள்ளைக்கார கும்பல்கள்.... அமைதியான அரசாங்கம் நடைபெற விடாமல் கலவரங்களும், குழப்பங்களும் செய்கின்றது அதாவது தன்னல வெறிகொண்ட சுயநலக்காரக் கும்பல்கள் அல்லது கூட்டங்கள் எல்லா நாடுகளிலுமே அரசாங்க விரோதப் போக்கை வளர்க்க மார்க்சின் பெயரைப் பயன்படுத்திக் கொள்கின்றது...... என்றிப்படி மார்க்சீய மறுப்புக் கருத்துக்கள் எதிர்ப்புக் கருத்துக்கள் உலகெங்கும் துவங்கின.

கடவுளின் அவதாரங்கள். தூதுவர்கள், அடியார்கள், நேரடி வாரிசுகள்...... மக்களைக்காக்கத் தீடீர் திடீரென்றுத் தோன்றி வழித்தோன்றல்கள் இன்றிச் செயல்-பட்டு மறைந்தது போல அன்றி கார்ல் மார்க்சு மறைந்துவிடவில்லை. அவன் தன்னுடைய வாழ்வில் அனுபவித்தத் துன்பங்களையும், துயரங்களையும் போல் வேறு எந்த ஒரு மனிதனும் துன்பப்படக் கூடாது என்று முடிகட்டினன், அதனல் அவனுக்கு மானுட இனத்தில் மீது அளப்பரிய ஆர்வமும் அன்பும் பிறந்தது. அதற்-காக அல்லும் பகலும் சிந்தித்து உழைத்துப் பல முடிவுகளைக் கண்டறிந்தான். அந்த முடிவுகள் உலகில் எந்தப் பகுதியிலும் முளைத்துக் கிளைத்து வளரக் கூடிய தத்துவ வித்துக்களாயின. அந்தத் தத்துவ வித்துக்கள் தரும் விளைச்சல்கள் எல்லாப் பசி-களையும் போக்கும் விருந்தைத் தரக்கூடியன. எனவே அவனுடைய விதைகளை விதைத்து விளைச்சலைக் காண விவசாயிகள் உலகெங்கும் தோன்றினர்கள். அவனைத் துறந்த பிறந்த மண் கூட அவன் இறந்த பிறகு அவன் தத்துவ வித்துக்களைப் பயிராக்கும் விவசாய நிலமாக மாறிவிட்டது. கார்ல் மார்க்சை கடவுளாக மாற்ற விட்டாலும் கடவுளுக்கெல்லாம் கிடைக்கின்ற சிறப்புக்களைவிட மிகுந்த சிறப்பு அவனுக்குத் தரப்பட்டுக் கொண்டே வருகின்றது. தெரிந்தோ தெரியாமலோ, புரிந்தோ புரியாமலோ மார்க்சீயம் வெற்றி பெற்ற நாடுகளில் எல்லாம் மார்க்சு கடவுளாகவே மதிக்கப்படுகின்ருன். இங்குதான் 'இந்தியாவின் மார்க்சீயம்' உருவாகின்றது.

இந்தியாவில் உள்ள மார்க்சியவாதிகள் மேலைய நாட்டைப் பின்பற்றி இந்து மதத்தைக் கடுமையாக விமர்சித்து மதவுணர்வுமிக்க பெரும்பாலான பொது மக்க-ளின் வெறுப்பையும், மறுப்பையும் தேடிக்கொண்டு விட்டார்கள். எனவே 'மார்க்சு', 'மார்க்சீயம்', 'கம்யூனிசம்'...... போன்ற சொற்கள் இந்திய மக்களுக்கு வேண்டாத வைகளாக, தேவையில்லாதவைகளாக, வெறுப்புமிக்கவைகளாக .... தோன்றி விட்டது. இந்தியாவில் உள்ள மதவுணர்வுகள் நிறைந்த மக்கள் தங்களுடைய மதத்-தைப் பலியிட்டுப் பொருளாதாரச் சமவாழ்வை பெறத் தயாராயில்லை.

அதாவது, காசுக்காகக் கடவுளை விற்கத் தயாராயில்லை இந்தப் பேருண்மையை இன்றைய இந்திய மார்க்சீயவாதிகள் இன்னமும் உணர மறுக்கின்றனர்கள். 'இரசியா -விலும், சீனாவிலும், பிற கம்யூனிச நாடுகளிலும் மதத்தை வெற்றிக் கண்டது போல்; இந்தியாவிலும் மார்க்சீயம் மதத்தை வெற்றிக் கண்டுவிடும்' என்று மார்க்சீயவாதி -கள் பகற்கனவு காண்கின்றனர்கள். இன்னமும் அவர்கள் ஏட்டுலகவாதியாக இருக்கின்றனர்களே ஒழிய உலகியல் நாட்டு நடப்பு வாழ்வியலைப் புரிந்து கொள்ளு -கின்றவர்களாக மாறவில்லை மாறமாட்டார்கள்.

இக்கருத்துக்களை என் தந்தையின் காலத்திலிருந்தே வலியுறுத்திக் கூறி வருபவனே நான். மேலைய நாடுகளில் கம்யூனிசத்தால் வெற்றிக் கொள்ளப்பட்ட மதமெல்லாம் வெறும் அறிவியல் பூர்வமான மதங்களே! இன்னும் சொல்லப்போனால் அவைகள் வரலாற்றுக்குட்பட்ட மதங்களே. அதாவது அவற்றின் தோற்றமும், வளர்ச்சியும், உள்ளீடும், அடிப்படையும, உயிரும்......மிகத் தெளிவாக கணிக்கப்படக் கூடிய நிலையிலேயே உள்ளன. எனவே அவற்றைத் தாக்க, தகர்க்க மிகமிக எளி தான தத்துவங்களும், சாதனங்களும் மார்க்சீயவாதிகளால் கண்டுபிடிக்கப்பட்டன. அதாவது, மேற்குறித்தமதங்கள் உலகியல் நடைமுறையில் அதிகமாக ஒன்றியிருந்தன; மிகுந்த பொருளாதார வளத்தைப் பெற்றிருந்தன. அதன் குருமார்கள் செல்வச் செழிப்பான வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். தேவாலயங்களும், மடா -லாயங்களும் முதலாளித்துவத்தின பாசறைகளாக இருந்தன அவற்றின் சடங்குகளும் சாத்திறங்களும், விழாக்களும் முதலாளித்துவச் சுரண்டலை நியாயப்படுத்தியும், நேர்மைப்படுத்தியும் பேசின. எனவே, ஏமாற்றப்பட்டவர்களும், சுரண்டப்பட்டவர் -களும், வறுமையில் வாடி வதங்கித் துன்புற்றவர்களும், வாழ்க்கைத்தேவைகளால் ஏங்கிக்கிடந்தவர்களும்....மதத்தை எதிர்த்து முறியடிக்கத் துடிதுடித்துக் கொண்டிருந் -தார்கள். ஆனால் வழிவகைத் தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது மார்க்சீயம் பட்டுப்போன மரங்கள் மிகுந்த காட்டினில் நெருப்புப் பற்றியது போல் மிகமிக விரிவாகவும் விரைவாகவும். பற்றி எரிந்தது. அந்தக் காட்டுத் தீயை யாராலும் அணைக்க முடியவேயில்லை. அந்தக காட்டுத் 'தீ' யில் அனைத்துமத அமைப்புக்களும், பிடிப்புக்களும், செல்வாக்குகளும், ஆட்சிகளும்......எரிந்து சாம்பலாயின. ஆனால் இந்தியாவில் 'இந்து மதம்' எந்த வரலாற்றுக் கணக்கீட்டுக்கும் உட்படாத ஒன்றாக இருக்கின்றது. இந்துமதத்தின் தோற்றமோ, வளர்ச்சியோ, அடிப்படையோ, உள்ளீ டோ, உயிர்த்துடிப்போ யாராலும் எளிதாகக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கின்றன. கோவிலுக்குப் போகின்றவனும் இந்துவாக உள்ளான்; போகாதவனும் இந்துவாக உள்ளான். இந்துமதச் சாத்திறங்களையும், தோத்திறங்களையும் பெயரளவில் தெரிந் -தவனும் இந்துவாக உள்ளான்; இந்துமதத்தை நம்புகின்றவனும் இந்துவாக உள்ளான், நம்பாதவனும் இந்துவாக உள்ளான். இந்து மதம் குருமார்களால், பூசாரிகளால்......கட்டிக்காக்கப்படவில்லை. ஆனால் இந்து மதம்தான் குருமார்களையும் பூசாரிகளையும் கட்டிக்காக்கின்றது.

இந்துமதம் என்ற ஓர் அமைப்பை, இயக்கத்தை, தத்துவக்கோட்பாட்டை ......இந்தியமக்களின் அன்றாட நடைமுறை வாழ்விலிருந்து தனித்துப் பிரிக்கவே முடியாது. அப்படிப் பிற மதங்களையெல்லாம் பொது மக்களிடமிருந்து பிரிக்க முடிந்த் தால்தான், மார்க்சீயம் அவற்றை வெல்ல முடிந்தது எனவே, இந்தியாவில மார்க்சீயத்தால் இந்துமதத்தை வெல்லவே முடியாது,

இந்து மதம் வெறும் அறிவியல் பூர்வமான மதமோ! அல்லது இயற்கையிறந்த தெய்வீகப் பூர்வமான மதமோ அல்ல! அல்ல! அல்ல!......இந்துமதம் முழுக்க முழுக்க உணர்வுப் பூர்வமான மதம். அதுவும் ஒவ்வொரு மனிதனும் இந்துமதத்தைத் தனது அன்றாட வாழ்வில் உணர்வுப் பூர்வமாகக் கடைப்பிடித்திடும் தன்மை இம்மதத்துக்கு மிகுதியாக இருக்கிறது. எனவே, வெறும் அறிவியல் பூர்வமான பகுத்தறிவு வாதத் தாலோ! நாத்திக வாதத்தாலோ! பொருள் முதல் வாதத்தாலோ......இந்து மதத் -தை வெல்லவே முடியாது முடியாது முடியாது முடியவே முடியாது.

இந்து மதம் ஒரு மதமே அல்ல இதற்கு மற்ற மதங்களைப் போன்று வெறும் புராண இதிகாச வேத வலிமை மிகுதியாகக் கிடையாது. இது ஒரு சமுதாயத் தத்துவம் இன்னும் சொல்லப் போனால், இந்து மதம் இந்திய மக்களின் பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியோடு இரண்டறக் கலந்துவிட்ட ஒன்றேயாகும். இதைச் சற்று அழுத்தமாக, பொதுப்படையாகக் கூற வேண்டுமேயானால்; 'இந்து மதம் ஒரு மத –மல்ல; அது இந்தியப் பண்பாட்டின் நிலைக் கலனாகும்'. எனவே, இந்து மதத்தை வெற்றிக் கொள்ள முயல்பவர்கள் முதலில் இந்தியாவில் 'பண்பாட்டுப் புரட்சியை' உண்டாக்க வேண்டும்.

இந்தியாவில், இதுவரை இந்த உலகிலுள்ள எல்லா இனப்பண்பாடுகளும், மதப்பண்பாடுகளும், நாட்டுப் பண்பாடுகளும்......அரசியல் ஆதிக்கத்தோடு மோது -தல்களை நிகழ்த்தி முடித்து விட்டன. அம்மோதுதல் சிறுசிறு சிதைவுகளை நினைவுச் சின்னங்களாக ஆக்கியிருக்கின்றனவே தவிர எந்த ஒரு குறிப்பிடத்தக்க பெரிய வெற்றியையும் பெற்றிடவே இல்லை. இப்பேருண்மையினை உணராத இந்தியமார்க்சீய -வாதிகள் இந்து மதத்தைத் தாக்கித் தகர்க்கவும் பண்பாட்டுப் புரட்சியினைத் தூக்கி நிறுத்தவும் முயன்றிடுகின்றனர்கள் இது எப்படி வெற்றி பெறும்?

'இந்தியப் பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுகளின் வேர்கள் மிகமிக ஆழமாகப் பதிந்திருப்பதால் பண்பாட்டுப் புரட்சிக்கே இடமில்லை இங்கு......' இந்த எனது வாதங்களைத் தனது கடைசிக் காலத்திலேயே ஒப்புக் கொண்டிட்டார் என் தந்தை. அதனால் தான், அவர்''.. ...உன் கூற்றுப்படி பார்த்தால் பொதுவுடமைத் தத்துவம் இந்தியாவில் நிலைநாட்டப்படும் பொற்காலம் உருவாகவே உருவாகாதா?......'' என்று ஏக்கமும் ஏமாற்றமும் நிறைந்த குரலிலே பலமுறை கேட்கவாரம்பித்திட்டார் அவருடைய குரலின் எதிரொலி அவருடைய நண்பர்களிடமும் கேட்கவாரம்பித் திட்டது......?!?!

அதற்கு ஒட்டு மொத்தமாக நானளித்த பதில்......'' இந்தியாவுக்குப் பொது வுடமைத் தத்துவம் புதியதல்ல. இந்தியப் பண்பாட்டு மரபுப் பாரம்பரியக் கூறுகள் அனைத்துமே பொதுவுடமைத் தத்துவத்தை அடிப்படையாகத்தான் கொண்டிருக் -கின்றன ஆனால், காலப் போக்கிலும் சமய சமுதாய அரசியல் தோற்ற மாற்றங் -களாலும் இவை ஓரளவு திரிபுற்றிருக்கின்றன. அத்திரிபுகளைச் சீர் செய்யத்தான் அவ்வப்போது சித்தர்கள், முத்தர்கள், புத்தர்கள், பத்தர்கள்......தோன்றிடுகின்றனர் -கள். அப்படித் தோன்றியவர்களுள் ஒருவரே கார்ல்மார்க்சு. ஆனால் வெளிநாடுகளில் கடவுள் நெறியை வித்திட்டு வளர்த்திட்ட பொதுவுடமைத் தத்துவம் சென்ற நூற்றாண்டில் மிகமிகக் கெட்டுப் போயிருந்ததால்;

கார்ல்மார்க்ஸை அங்கே திரு அவதாரம் செய்ய நேரிட்டுவிட்டதும்: கன்பூசியஸ், சொராஸ்டிரர், இயேசு, முகம்மது நபி.....முதலிய திருவருட் செல்வர்களோடு சேர்ந்து திரு அவதாரம் செய்தவர்தான் "கார்ல் மார்க்ஸ்'.....என்ற கருத்தை இந்திய மார்க்சீய வாதிகள் ஒப்புக் கொண்டு செயல்படவாரம்பத்திட்டால்;.. இயேசு கிறித்துவின் தத்துவமும்; முகம்மது நபியின் தத்துவமும் இந்திய மண்ணில் வேரூன்றிச் செழித்திருப்பது போல்; மார்க்சீயத் தத்துவமும் வேரூன்றிச் செழித்திடும். அப்போதுதான் மெல்ல மெல்லப் பொதுவுடைமை பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கிடும்''..என்பது தான்.

இந்தக் கருத்துக்களின் மாபெரும் விளக்கமாகத்தான் எனது 'இந்தியாவில் புரட்சி ஏன்? எப்பொழுது? எப்படி? நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல், என் தந்தை ஆங்கிலத்தில் 'Revolution in India why? When and how? என்று எழுதிய மிகப்பெரிய நூலை அடிப்படையாகக் கொண்டு; அதன் சுருக்கமாக எழுதப்பட்ட ஒன்றேயாகும். இந்த நூல் அளவில் பெரியதாக இருப்பதால்; இதன் முன்னுரையாக எழுதப்பட்ட கார்ல் மார்க்சின் வரலாற்றுச் சுருக்கத்தை முதலில் தனித்த சிறு நூலாக அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்தேன்.

இந்த ஏற்பாட்டை முன்னின்று துணைநின்று......நிறைவேற்றித் தந்த நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை உரியதாக்கிக் கொள்ளுகின்றேன்.

அன்பே சிவம்! அறிவே சிவம்! அமைதியே சிவம்!
மகிழ்வே சிவம்! சகோதரத்தத்துவமே சிவம்! சமத்துவமே சிவம்!
உழைப்பே சிவம்! உண்மையே சிவம்! பிறர்க்கு உதவுதலே சிவம்

ஓம் திருச்சிற்றம்பலம்!

அன்பு அருளாட்சி நாயகம்
குருமகா சன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்
பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி

---

# மெய்யான இந்து மதமும் பொய்யான ஹிந்து மதமும் என்ற தலைப்பின் வரிசையில்..........

## 'மெய்யான இந்துமதம் காத்த கருவூர்த் தேவர் வரலாறு'

### "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள்' பிறந்த வரலாறும், பன்னிரு திருமுறைகள்' பிறந்த வரலாறும்:

உத்தம சோழன் நாடாள முதலாம் இராசராச சோழன் ஆட்சிப் பொறுப்புக்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்ட காலத்தில் தென்பாண்டி நாட்டு ஆழ்வார்த் திருநகரிலிருந்து ஆழ்வார்களின் பாடல்களை யாழ்மீட்டி இசையோடு பாடிக்கொண்டு வந்த தேவதாசிகள் சரியாக மதிக்கப்பட்டுப் பாராட்டப்படாமல் விடப்பட்டு விட்டனர் அதனால் அவர்கள் தஞ்சைப் பெரிய கோயிலில் தங்கி தங்களுடைய அருளிசைப்

பணியைச் செய்ய இயலாமல் போனது. அவர்கள் கங்கை கொண்ட சோழபுரம் சென்று தங்கி தங்களுடைய அருளிசைப் பணியைச் செய்து வந்தார்கள். அப்பொழுது காட்டு மன்னார்குடியிலிருந்த நாதமுனி அவர்கள் கங்கை கொண்ட சோழபுரம் வந்து அந்தத் தேவதாசிகளின் யாழிசையையும் இசைபாடல்களையும் கேட்டு மகிழ்ந்தார். இவர் பெருமுயற்சி செய்து அந்தத் தேவதாசிகளுடனே ஆழ்வார்த் திருநகரி சென்று அந்தத் தேவதாசிகளிடம் இருந்த ஓலைச்சுவடிகள் அனைத்தையும் சேகரித்தார் அவற்றின் மூலம் பன்னிரண்டு ஆழ்வார்களின் பாடல்களில் பெரும்பாலானவை கிடைத்தன. கிடைக்காதவைகளைத் தொகுக்கும் பொருட்டுத் தமிழகம் முழுவதுமிருந்த திருமால் திருப்பதிகளுக்கும், திருமால் பத்தர்களின் இல்லங்களுக்கும் சென்று முழு -மையாகத் தொகுத்தார். அப்படித் தொகுத்து முடிப்பதற்கு பதினாறு (16) ஆண்டு -களுக்கு மேலாகிவிட்டது. அவர் தொகுத்தவைகளைத் தஞ்சைப் பன்னாட்டுப் பன்னேக் -குப் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டு வந்து பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களிடம் ஒப்படைத்தார். அப்படி அவர் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி அவர்களிடம் தமது தொகுப்பு முழுவதையும் ஒப்படைத்த -தால்' தஞ்சைப் பல்கலைக் கழகத்திலிருந்த பெரும் புலவர்கள் பலரும் ஒருங்கு கூடிப் பெருமுயற்சிகளைச் செய்து பன்னிரண்டு ஆழ்வார்களின் பாடல்களை வகைப்படுத்தி வரிசைப்படுத்தி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாக உருவாக்கினார்கள். இந்தத்தொகுதி -க்கு எண்ணற்ற நகல்கள் எடுத்து நாடெங்கும் பெரிய விழா கொண்டாடி நாடெங்கும் அனுப்பினார்கள் இந்த விழா தஞ்சைப் பெரிய கோயிலில் முதலாம் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது. குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரி -யாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத் -தின் மறுமலர்ச்சிக்கு இந்த இலக்கியத் தொகுதி பேருதவி புரியும் என்று மிகவும் மகிழ்ந்தார், அதனால் அவர் நாதமுனி அவர்களின் விருப்பப்படி அவர் விரும்பிய பன்னிரண்டு ஆழ்வார்களுக்கும் செம்பினால் வார்ப்புச் சிலைகளைச் செய்து கொடுத்தார். இவையன்றி ஐம்பொன்னினால் சில சிலைகளும் சில கோயில் கருவறைகளுக்குக் கருவறை மூலவர்களின் சிலைகளும் தாமே கைப்படச் செதுக்கி அன்பளிப்பாகக் கொடுத் தார் இவையனைத்தும் நாதமுனி அவர்களின்பத்தியால் தமிழ்மொழிக்குக்கிடைத்திட்ட நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் எனும் மிகப்பெரிய கலைச் செல்வத்திற்காக வழங்கப் பட்ட அன்பளிப்புக்களேயாகும். இந்தக் கலைச்செல்வங்கள் தோன்ற ஆரம்பித்தது அல்லது தோன்றுவதற்குக் காரணமாக இருந்த இடம் கங்கை கொண்ட சோழ புரத்துக் கோயில். இக் கலைச் செல்வம் முழுமை பெற்று நிறைவுற்று வெற்றி விழாக் கண்ட இடம் தஞ்சைப் பெரியகோயில். அதாவது, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஆரம்பித்துத் தஞ்சாவூரில் நிறைவு பெற்றது, முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக்காலத்தில்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போலவே, தஞ்சைப் பெரிய கோயிலில் ஊர் ஊராகச் சென்று வழிபாடு செய்யும் பத்தர்கள் கூட்டத்தார் ஒருமுறை மாலை நேரத்திலே மனமுருகித் தேவாரப் பாடல்களைத் தஞ்சைப் பெரிய கோயிலில் பாடிக் கொண்டிருந்த பொழுது அங்கு வந்திட்ட முதலாம் இராசராச சோழன் அவற்றைக் கேட்டு பெருமகிழ்வு எய்தினான். உடனே அவன் அப்பாடல்களைப்பற்றிய விசாரணை -களைத் துவக்கினான். அதன் விளைவாகத் தேவாரப் பாடல்கள் அனைத்தையும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போல் தொகுகக ஆசைப்பட்டான்.

அம் முயற்சியில் குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள் பதினெண்சித்தர்களின் குருவழி வாரிசுகளில் ஒருவராக வாழ்ந்து வரும் சிதம்பரம் வட்டாரத் திருநாரையூர் பிள்ளையார் கோயில் குருக்கள் குடும்பத் தாரை அணுகுமாறு அறிவுரை கூறினர். அதன்படியே முதலாம் இராசராசனும் பெருமுயற்சிகளைச் செய்து கிடைத்த மூவர்களின் தேவாரப் பாடல்களையும் திருவாச -கத்தையும் தஞ்சைக்குக்கொணர்ந்தான். ஆனால், அவனுக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போல் நாட்டிலிருந்த சிவனடியார்களின் பாடல்களனைத்தையும் தொகுக்க வேண்டும் என்று ஆசை வந்தது. அதனைக் குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களிடம் தெரிவித்தான். அதற்கு அவர் அப் பணியின் துவக்க விழாவைத்தான் தங்கள் காலத்தில் செய்யமுடியும் என்றும், அப் பணியின் நிறைவுவிழா எப்பொழுது நிகழும் என்று சொல்லமுடியாது என்று கூறிச் சிவனடியார்களின் பத்திப்பாடல்களைச் 'சீவநெறித் திருமுறைகள்' என்ற தலைப்பில் தொகுக்கும் பணியைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி அவர்களிடம் ஒப்படைத் தார். இப்பணி தஞ்சாவூர்ப் பெரியகோயிலில் மிகப் பெரிய விழாவாக நிகழ்ந்தது. ஆனால் இது கி.பி. 1160 இல் இரண்டாம் இராசராசன் காலத்தில்தான் நிறைவு பெற்றது. அதாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னி -தானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களின் திருநிறைச் செல்வன் கருவூர்த் தேவரின் தொடர் முயற்சியால் முதலாம் இராசராசன் காலத்தில் துவக்கப் -பட்ட சீவநெறித் திருமுறைகள் எனும் தொகுப்பு முதலாம் இராசேந்திரன் காலத்தில் (கி.பி. 1012-1044), முதலாம் இராசாதிராசா காலத்திலும் (1018-1054) இரண்டாம் இராசேந்திரன் காலத்திலும் (கி.பி. 1054-1068), வீர இராசேந்திரன் காலத்திலும் கி. பி. 1063-1070), முதலாம் குலோத்துங்கன் காலத்திலும் (கி. பி. 1070-1120), விக்கிரம சோழன் காலத்திலும் (கி.பி. 1118-1136), இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலும் (கி.பி. 1113-1150) வளர்ந்து இரண்டாம் இராசராசன் (கி பி. 1146-1163) காலத்தில்தான் நிறைவு பெற்றது. அதாவது கருவூர்த் தேவர் தமது தந்தையின் கனவையும், தமது தந்தையால் உருவாக்கப்பட்ட பேரரசனை முதலாம் இராசராசனின் கனவையும் நிறைவேற்றுவதற்காக நூற்றாண்டு -களுக்கு மேலாக உழைத்து கி பி. 1160 இல் கங்கை கொண்ட சோழபுரக் கோயிலில் 'பன்னிரு திருமுறைகள்' என்ற தலைப்பில் சீவநெறித் திருமுறைகள் அனைத்தையும் தொகுத்து நிறைவு செய்தார். அதாவது, தஞ்சைப் பெரிய கோயிலில் துவங்கிய தொகுப்புப்பணி கங்கை கொண்ட சோழபுரக் கோயிலில் நிறைவு பெற்றது இங்கு நினைவு கூரத் தககது. திருமாலின் பெருமை கூறும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் கங்கை கொண்ட சோழபுர கோயிலில் உள்ள சிவலிங்கம் சன்னதியில் துவங்கித் தஞ்சைப்பெரிய கோயிலில் உள்ள சத்திலிங்கச் சன்னதியில் நிறைவு பெற்றது என பதும்; சிவனின பெருமை கூறும் 'பன்னிரு திருமுறைகள்' தஞ்சைப்பெரிய கோயிலில் உள்ள சத்தி லிங்கச் சன்னதியில் துவங்கிக் கங்கை கொண்ட சோழபுரக் கோயிலில் உள்ள சிவ லிங்கச் சன்னதியில் நிறைவு பெற்றது என்பதுமேயாகும். ஏனெனில், மெய்யான இந்துமத மறுமலர்ச்சிக்காகத்தான் தஞ்சையிலுள்ள சத்திலிங்கக் கோயிலும், கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள சிவலிங்கக் கோயிலும்; பொதிகை மலை நிலவறையி லிருந்து வெளிப்பட்ட பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்ன. தானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக்கருவூரூர் அவர்களால் கட்டப்பட்டன.

அதாவது இந்த இரண்டு கோயில்களையே மெய்யான இந்து மத மறுமலர்ச்சிப் பணிக்குரிய கைகளாகவும், கண்களாகவும் படைத்தார் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர். இவற்றின் மூலமே என்றென்றும் மெய்யான இந்து மதத்திற்குக் கைகளாகவும் கண்களாகவும் விளங்கிடக் கூடிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும், பன்னிரு திருமுறையும் உருவாயின.

இவற்றில் இராமானுஞ்சாச்சாரியாரால் வைணவ மதம் என்றோர் பிரிவு ஏற்படுவதற்கு முன்பே உருவான ஒன்றே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். எனவே, மெய்யான இந்துமதத்தில் வைணவ மதத்திற்காக நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும், சைவ மதத்திற்காகப் பன்னிரு திருமுறைகளும் என்று இரண்டு தனிப்பிரிவுகளாக இலக்கியங்கள் உருவானதாக யாரும் எண்ணத் தேவையில்லை. அப்படியே எண்ணினாலும் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிக்குப் பிறகுதான் சைவத்திலிருந்து வைணவம் என்றோர் பிரிவு உண்டாயிற்று என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த வீரசைவ மரபிற்குரிய இராமானுஞ்ச முதலியார் உருவாக்கிய திருமாலின் பத்தி நெறித் தத்துவம்தான் வைணவ சமயம் என்று தனியாகப் பிரிந்ததே தவிர; மெய்யான இந்துமதத்தில் அப்படிப்பட்ட பிரிவு இல்லை. எனவேதான், இன்றைக்கு பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியைப் போல் சத்தி இலிங்கக் கோயிலையும், சிவ இலிங்கக் கோயிலையும் மட்டும் புதிதாக உருவாக்காமல்; ஏற்கனவே உள்ள அனைத்து வகையான கோயில்களையும் புத்துயிர்ப்புச் செய்துப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டமும், கருதுலர், குருகுலம், தருகுலம், திருகுலம் என்று நான்கு வகையான அருளுலக விதைப் பண்ணைகளையும், நாற்றுப் பண்ணைகளையும் உருவாக்கும் திட்டமும் செயலாக்கப்படுகின்றது பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி அவர்களால்.

---

## இந்திய நாட்டின் பெயர் பற்றிய கருத்தோட்டம்

கி.பி. 1772-இல் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும் அதன்கீழ் 48 வகையான நிறுவன நிர்வாகங்களையும் தோற்றுவித்த கருவூரர் வழிவந்த கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்களின் கருத்துக் குவியல்களில் இருந்தும்; பாரம்பரிய மரபுப்படியும் உரிமைப்படியும் இ.ம இ.கசு ஏளனப்பட்டியாருக்குப் பிறகு தலைவராகப் பொறுப்பேற்ற முடிகண்ட சோழபுரம் எனப்படும் முடிகணத்து (கரூர் வட்டம், திருச்சி மாவட்டம்) காக்கா வழியன் பண்ணையாடியான சித்தர் காகபுசுண்டர் எனும் சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்களின் கருத்துக் குவியல்களிலிருந்தும் தொகுக்கப்பட்ட ஒரு சில கருத்துக்கள்.

(1) இந்து மதத்துக்குரிய மக்கள் வாழுகின்ற நாடு என்ற பொருளிலேதான் இந்தியா என்ற பெயர் ஏற்பட்டது.

(2) இன்றுள்ள 'சிந்து' என்ற ஆறு இளமுறியாக் கண்டத்தில் 'இந்து' என்றே அழைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆறு இளமுறியாக் கண்டத்தில் இருந்த பனிமூடிய மலையான தென் இமயமலையிலிருந்து உற்பத்தியாகி ஓடியது. அதைச் சுற்றி மிகுந்த

வளமான பகுதிகள் இருந்தன. அந்த ஆற்றங்கரையிலே தான் பதினெண் சித்தர்கள் தங்களுடைய இந்து மதத்திற்குரிய உலகியல் படியான சாத்திரச் சம்பிறதாயங்களை -யும், சடங்குகளையும், திருவிழாக்களையும்; பூசாறி, குரு குருமார் குருக்கள் ஆகிய நால்வரைத் தயாரிக்கும் அருட்பள்ளிகளையும்; சாத்திரிகள் ஐந்திறத்தார் மந்திறத் தார் தந்திறத்தார், எந்திறத்தார், தோத்திரியார் (ஓதுவார்) எனும் ஆறுவகையின -ரையும் தயாரிக்கும் 48 வகையான கருவறைகளையும், 48 வகையான வெட்டவெளிக் கருவறைகளையும் உருவாக்கி நிர்வாகம் செய்யக் கூடிய அருட்கலை வல்லார்களை உருவாக்கும் பல்கலைக் கழகங்களையும் உடைய 'அருட்பா' (அரப்பா) நகரையும், இதே போல் முழுக்க தவநிலைக்குரிய ஐந்தீ வேட்டல், முத்தீ ஓம்பல், சுருதி ஆரணத் ஆகம மீமாம்சைகளையும், 1) அத்தரம் 2) அத்திரம் 3) அத்திறம் 4) சாத்தரம் 5) சாத்திரம் 6) சாத்திறம் 7) சூத்தரம் 8) சூத்திரம் 9) சூத்திறம் 10) தோத்தரம் 11) தோத்திரம் 12) தோத்திறம் 13) வேத்தரம் 14) வேத்திரம் 15) வேத்திறம் 16) நான்மறை, 17) நான்முறை, 18) நானெறி, 19) நான்வேதம், 20) நவநாதங் -கள், 21) பதினெண் சித்தங்கள். 22) முப்பத்தாறு போதங்கள், 23) தொண்ணூற் -றாறு ஓதங்கள்...... முதலிய (இங்கு மேலும் பட்டியலிட்டுக் காட்டப்பட வேண்டிய நான்குகள் குருவழியின்றி பெயரளவில் கூட தெரிந்து கொள்ளக் கூடாது என்று தெரிவிக்கப்படவில்லை) இருபத்தேழு வகையான அகப்பக்குவ அருட்கலைகளையும் அவரவர் தரத்திற்கேற்பக் குருவழிக் கல்வியாகக் கற்பித்திடும் ஒரு பெரு நகரமாக பொருளுலக மோகங்களெல்லாம் கடந்து அருள்மோகம் மட்டும் உடைய 'மோகம் சிதரு' நகரையும் (மொகஞ்சதாரோ நகர்) உருவாக்கி -யிருந்தார்கள். எனவே, இந்து என்ற மதத்தின் தலைமைக்குரிய இடம் இந்து ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டது. அதைச் சுற்றியிருந்த பகுதிகளெல்லாம் இந்தியா என்றே அழைக்கப்பட்டது ' இந்த இந்து நாடு 49 நாடுகளை உள்ளடக்கிய -தாக இருந்தது என்ற செய்தி குருபாரம்பரியம், அரசபாரம்பரியம், இலக்கியபாரம் பரியம் முதலியவைகளிலிருந்து தெரிகிறது.

(3) இந்த இந்தியா என்ற பெயர் சித்தர்களின் இலக்கியங்களில் இந்துநாடு, இந்துதேசம் என்ற பெயர்களில் குறிக்கப்படுகிறது.

(4) தேசு = ஒளி, தேசம் — ஒளிமிகுந்த இடம் —> அதாவது மக்கள் காடு மேடுகளைத் திருத்திச் செப்பனிட்டு ஒளிநிறைந்த வாழ்க்கை வாழுகின்ற இடம். இந்து என்ற ஆறு மிகுந்த பேரொலி (Sound) எழுப்பிக் கொண்டு ஓடக் கூடிய ஒன்றாக இருந்தது. அந்த ஒலி இனிமையான இசையொலி போன்று இருந்தது (Musical Sound) எனவேதான், இந்த இந்து என்ற ஆறு காலப்போக்கில் சிந்து என்று அழைக்கப்பட்டது

(5) இதே இந்து என்ற ஆறு எல்லாவிதப் பயிரினங்களையும், உயிரினங் -களையும் தண்ணீரால் உயிரூட்டி வளர்த்தது. எனவே, இதுவே அனைத்து உயிரினங் -களுக்கும் உயிரணுவாக இருந்தது என்று பொருள்பட 'விந்து' என்ற பேரிலும் அழைக்கப்பட்டது.

(6) இதே இந்து என்ற ஆறு சோலைகளும், தோட்டங்களும், கழனிகளும் நிரம்பப் பெற்று மிகவும் அழகாக இருப்பதால் இனிமை (இனிமையாறு, இனியாறு),

தேன் (தேனாறு), அழகு (அழகாறு), உயிர் (உயிராறு)........என்று பல பெயரைப் பெற்றிருக்கின்றது இந்தப் பெயர்களெல்லாம் இந்துமதத்திற்குரிய பொருள் விளக்கச் சொற்களாகவே இருந்து வருகின்றன. எனவேதான், இளமுறியாக் கண்டத்தில் இருந்த 49 நாடுகளும் இந்த இந்து ஆற்றங்கரையிலிருந்த அருட்பா நக்கரையும், மோகம் சிதர நகரையும் தலைமையாகக் கொண்டு அருளாட்சி செய்யுமாறு செய்யப் பட்டிருக்கின்றன.

(7) இளமுறியாக் கண்டத்திலிருந்த தென் இமயமலையிலிருந்து உற்பத்தியான ஆறுகளிலே இந்த 'இந்து' என்ற ஆறுதான் மிகப்பெரிய ஆறுகவும், அருளாட்-சித் திருநகரங்களைத் தனது கரையிலே பெற்றிருந்த ஆறுகவும், தெய்வீகத் தன்மை மிக்க புனித ஆறுகவும் கருதப்பட்டது. எனவேதான், இளமுறியாக் கண்டமே இந்துக் கண்டம் என்று சில இடங்களில் குறிக்கப்படுகின்றன. அதனுல்தான் புதிதாகத் தோன்றிய பனிமூடிய வட இமயமலையிலிருந்த பெரிய ஆறு இந்து என்று பெயரிடப் பட்டது. வட இமயமலையை எல்லையாகக் கொண்ட பரந்த நிலப்பரப்பு இந்துநாடு என்று அழைக்கப்பட்டது. அதுவே காலப் போக்கில் மாறி 'இந்தியா' என்று அழைக்கப்பட்டது.

(8) இப்படி மிகத் தெளிவாக நான்கு யுகங்களுக்கு முன்பிருந்தே; அதாவது, இளமுறியாக் கண்டத்திலிருந்தே இந்து என்ற சொல்லுக்குரிய, இந்துமதம் மிகத் தெளிவான தத்துவங்களோடும், செயல் சித்தாந்தங்களோடும், சாத்திறத் தோத்திரங்களோடும், சம்பிறதாயங்களோடும், சடங்கியல்களோடும், புராண இதிகாசங்களோடும், அருள் நிலையங்களோடும், அருளாளர்களோடும் மிகத் தெளிவான வடிவமைப்போடும், வளமான நெறிமுறைகளோடும், வலிமையான சட்டதிட்டக் கட்டுப்பாடுகளோடுமே வாழ்ந்து வந்திருக்கிறது. வாழ்ந்துவந்திருக்கிறது, வாழ்ந்து வந்திருக்கிறது, வாழ்ந்தே வந்திருக்கிறது. இதற்குரிய எல்லா வகையான சான்றுகளும் ஊன்றுகளும் பதினெண் சித்தர்கள், பதினெண் சித்தர் பீடாதிபதிகள், பதினெட்டாம்படிக் கருப்புகள், 48 வகைச் சித்தர்கள், எண்வகை மூல ஆச்சாரியார்கள், 13 வகைக் கருவழி ஆச்சாரியார்கள், 13 வகைக் குருவழி ஆச்சாரியார்கள், 48 வகைப் பதினெண் சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்-கள், 48 வகை அருளாளர்கள் முதலியோர்களின் எழுத்துக் குவியல்களில் ஏராள-மாகக் கிடைக்கின்றன, கிடக்கின்றன.

(9) இவற்றையெல்லாம் தமிழன் எண்ணிப் பார்த்துத் தன்னுடைய மதத்திற்குரிய பெயர் 'இந்து மதம்' என்பதுதான் என்று தெளிவோடும், துணிவோடும் உலகறி-யக் கூற வேண்டும். மேலும் ஒவ்வொரு தமிழனும் 'இந்து' என்ற சொல் ஓர் உயர் தனிச் செந்தமிழ்ச் சொல்' என்ற பேருண்மையை எங்கும் எப்பொழுதும் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாகப் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் தமது குருபாரம்பரியத்தில்;'...... .....அனுதிகாலத்திலேயே பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் அண்டபேரண்டமாளும் இந்துமதத்தைப் பற்றி அதனுடைய அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அமுதப் பைந்தமிழ் மொழியில் வழங்கியுள்ள நெடிய பெரிய விளக்கங்களின் சுருக்க

விளக்கக் கருத்துக்களாக யாம் தொகுத்து வழங்கும் இந்துமத விளக்கம், பூசாமொழி, பூசாவிதி, இந்துமதச் சாரம், இந்துமதத் தத்துவம், இந்துமதச் செயல் சித்தாந்தம், இந்து மத வாழ்வியல், இந்துமத வரலாறு, இந்துமதப் புராணங்கள், .இந்துமத எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்......முதலிய குறிப்பிட்ட சில நூல்களையாவது கோயில் ஊழியர்களாகத் தொண்டு புரியும் 48 வகையினரும் கற்றுத் தேர்ந்து புலமை பெற்றிடல் வேண்டும். அப்பொழுதுதான், நாட்டு நடப்பில் வாரத்தில் சில நாட்களாவது அவரவர் பிறந்த கிழமை, அருளுலகப் பொருளுலக நலம் வேண்டும் கிழமை, என்று குறிப்பிட்ட சிலநாட்களிலாவது அவரவர் ஊரிலுள்ள ஏதாவது ஒரு வழிபாட்டு நிலையத்திற்குச் சென்று வழிபாடு செய்யும் பழக்கம் பொது மக்களிடையே ஏற்பட்டிடும். மேலும், குருவழிச்சித்தி வேண்டுபவர்கள் வியாழக் கிழமையிலும்; சத்தி வழிச்சித்தி வேண்டுபவர்கள் வெள்ளிக்கிழமையிலும்; சிவன் வழிச்சித்தி வேண்டுபவர்கள் ஞாயிற்றுக்கிழமையிலும்; முருகன் வழிச்சித்தி வேண்டு பவர்கள் செவ்வாய்க்கிழமை அல்லது திங்கட்கிழமையிலும்; மாயோன் வழிச்செயல் படுபவர்கள் சனிக்கிழமையிலும்; பிறமண் வழிச் செயல்படுபவர்கள் புதன்கிழமையிலும்; தேவலோகத்தின் தேவர், தேவதை, தேவியர், அமரர், வானவர், விண்ணவர், கின்னரர், கிம்புருடர், கந்தர்வர், முனிவர், இருடி.........முதலியோரை வணங்கித் தேவத் தேவசேனதிபதியான முருகன் வழிச் செயல்பட விரும்புபவர்கள் செவ்வாய்க் கிழமையிலும் முறையே வழிபட்டால் நல்லது என்ற சிறப்பு விதியின்படி; பொது மக்களிடையே மேற்குறிப்பிட்ட நாட்களில் ஏதேனும் ஒரு வழிபாட்டு நிலையத்தில் அந்தந்தக் கிழமையில் அந்தந்த வழிபாட்டுக்குரியவர்கள் ஒருங்கு கூடி கூட்டு வழிபாடு செய்யும் பழக்கம் ஏற்பட்டிடும். அப்பொழுதுதான், கோயில்களில் உள்ள 48 வகையான ஊழியக்காரர்களுக்குப்; அவரவரின் ஏட்டறிவுகளுக்கும், பட்டறிவு களுக்கும், பயிற்சிகளுக்கும், முயற்சிகளுக்கும், அருளுலகத் தேர்ச்சி முதிர்ச்சிகளுக்கும் ஏற்ப உரிய பெரிய மரியாதைகள் பொதுமக்களிடமிருந்து கிடைத்திடும்.

அதோடு எல்லாவிதமான உதவிகளும், பாதுகாப்புக்களும் காலந்தவறாமல் போதுமான அளவு எல்லாவகையான கோயில்களுக்கும், எல்லாவிதமான கோயில் ஊழியர்களுக்கும் கிடைத்திடும். அத்துடன் 48 வகையான வழிபாட்டு நிலையங்களின், கட்டிடப் புதுப்பிப்பு, கருவறைப் புத்துயிர்ப்பு, நன்கொடை வழங்கல் நிதி.....முதலிய அனைத்தும் விரிந்தும் விரைந்தும் நாடெங்கும் பரவலாக நிகழ்ந்திடும். அதனால், எல்லாவிதமான வழிபாட்டு நிலையங்களும் அருட்படையின் பாடிவீடுகளாகவும் பாசறைகளாகவும் ஆகிடும். மேலும் அமையப்போகும் அருளாட்சிக்காக அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களும் வலிமையான அரண்களை உடைய அருளாட்சி நிர்வாகக் கோட்டை கொத்தளங்களாக அரண்மனைகளாக ஆகிடும். அப்படியெல்லாம் செயல்நிலை வளர்வதற்கு அடிப்படையாக அனாதி காலத்திலேயே 'இந்து' என்ற சொல்லுக்குப் பொருள் கூறும் சொற்களாகக் கூறப்பட்ட நாற்பத்தெட்டு சொற்களை -யும் பத்தியுள்ளம் படைத்த அனைவருமே மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டு எங்கும் எப்பொழுதும் எல்லாரிடத்தும் எடுத்துக் கூறி இந்து என்ற சொல் தமிழ்ச்சொல்தான் என்ற பேருண்மையை அனைத்துத் தமிழரும் புரியுமாறு செய்திடல் வேண்டும். அதன்பிறகுதான், இந்துமதம் தான் தங்களுடைய மதம் அல்லது தங்களுடைய மதம்தான் இந்துமதம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிடும் எல்லாத் தமிழருக்கும். இந்த நல்ல நம்பிக்கையின் அடிப்படையில்தான் தமிழர்களிடையே

ஒற்றுமையும் ஒருமைப்பாடும் விளைந்திடும்! விளைந்திடும்! விளைந்திடும்! அல்லது விளைவிக்கப்பட்டிடும்! விளைவிக்கப்பட்டிடும்! விளைவிக்கப்பட்டிடும்! அதன்பிறகே தமிழ்மொழி விடுதலை, தமிழின விடுதலை, தமிழ்ப் பண்பாட்டு விடுதலை, தமிழ் நாகரிக விடுதலை, பிறமண்ணினரான பிருமணர்களிடமிருந்து தமிழ்ச் சமுதாய விடுதலை, வட ஆரியர்களின் சமசுக்கிருத வேதமதத்திலிருந்து தமிழரின் தமிழ்மொழிக்குரிய மெய்யான இந்துமதத்திற்கு விடுதலை......என்று அனைத்துவகையான விடுதலைகளும் செயலாகிடக் கூடிய அரிய பெரிய வாய்ப்புக்கள் உருவாகிடும். உருவாகிடும், உருவாகிடும். அதாவது, தமிழ் மொழியிலுள்ள மெய்யான இந்து மதத்தின் வரலாற்றுப் பேருண்மைகளும், வாழ்வியல் நடைமுறைகளும், மெய்யான இலக்கியங்களும், உண்மையான அருளாளர்களும், அருளாட்சிக்குரிய வாரிசுகளும், அருளாற்றலை வழங்கவல்ல அருட்கலைகளும் முறையாக வெளிப்படல் வேண்டும் அல்லது வெளிப்படுத்தப்படல் வேண்டும். அவற்றின் அடிப்படையிலே கருத்துப் புரட்சி, எண்ணப் புரட்சி, சிந்தனைப் புரட்சி......முதலியவை வளவளர்ச்சி பெற்று இந்துமத மறுமலர்ச்சிப் பணி மாபெரும் வெற்றியினைப் பெற்றிடல் வேண்டும். எனவே, தமிழர்கள் தங்கள் மதத்தை இந்துமதம் என்றும், குமரி முதல் இமயம் வரை உள்ள நாட்டை இந்து நாடு என்றும், தமிழர்கள் தங்களை இந்துக்கள் என்றும், தெளிவாகவும் வெளிப்படையாகவும் குறிப்பிட்டுக் கொள்ளும் பொற்காலம் உருவாக வேண்டும். இதுவே தமிழர்க்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் நற்காலமாகும், நற்காலமாகும், நற்காலமாகும் எனவே, தமிழின விடுதலைக்காகவும், தமிழ்மொழி விடுதலைக்காகவும், இந்துமத விடுதலைக்காகவும் பழைய கற்கோயில்களையும், பொற்கோயில்களையும் புதுப்பிப்பதோடு; புதிய புதிய கற்கோயில்களையும், பொற்கோயில்களையும் உருவாக்க வேண்டும். இவற்றிற்காகக் கற்றோரும், மற்றோரும் தயாரித்த பழைய சொற்கோயில்களை மீண்டும் மக்களிடையே செல்வாக்குப் பெறச் செய்வதோடு புதிய புதிய சொற்கோயில்களை மக்களிடையே உலா வரச் செய்ய வேண்டும். இவ்வாறு நெடிய பெரிய தொடர் செயல் திட்டங்களோடு பூசாறி குரு, குருமார், குருக்கள் என்பவர்களாவது கட்டுப்பாட்டுடன் நூற்றாண்டுக் கணக்கில் செயல் பட்டால் தான்; பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான சீவநெறியெனும் மெய்யான இந்துமதம் பிழைக்கும், தழைக்கும், செழிக்கும், பயன் நல்கும்...'' என்று குறிக்கின்றார். இக்குருபாரம்பரிய வாசகத்தை அனைவருக்கும் நினைவுபடுத்துகிறோம்.

<u>சிறப்புக் குறிப்பு:-</u>

(1) **'மோகம் சிதரு நகரம்'** சோலைகளும், சிற்றாறுகளும் எண்ணிக்கையில் மிகுந்த ஒரு மிகப்பெரிய நகரமாகும்.

(2) **'அருட்பா நகர்', 'மோகம்சிதரு நகர்'** பற்றிய செய்திகள் தனிநூலாக சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையர் ம. பழனிச்சாமிபிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதில் இலக்கியப் பாரம்பரியங்களிலிருந்தும், அரச பாரம்பரியங்களிலிருந்தும், குருபாரம்பரியங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட எண்ணற்ற சான்றுகளும் ஊன்றுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

(முற்றும்)

# இவர்களையும் தெரிந்து கொள்வோம்

## பதினொரு இராசிவட்டக் கருவூரர்களின் சில முக்கியக் குறிப்புகள்

**1) அனாதிக் கருவூரர்;-**

தலைமுடி கருப்பாகவும், தாடி வெண்மையாகவும், பரட்டைத் தலையுடையவ-ரான இவர் சுமார் 306 ஆண்டுகள் வாழ்ந்தவரும்; தந்தர, தாந்தர, தாந்தரீக மந்திறங்களை முறையாக வகுத்து 243 பருவபூசை செய்தவரும்; அழகிய நாவற்-பழக்கருப்பு நிறம் கொண்டவருமாவார்.

**2) ஆதிக் கருவூரர்:-**

உடல் கருமையாகவும்; இடையில் சிவப்பு கருப்பு அங்கி அணிந்தவரும்; அழகிய நீள்தாடி உடையவரும்; சுமார் 275 ஆண்டுகள் வாழ்ந்தவரும்; மாயா நிலை, ஓயா நிலை, சாயா நிலைப் பூசைகள் நடத்தியவரும் இவரே.

**3) தொன்மதுரைக் கருவூரர்:-**

பிறை சூடிய நாகம் போன்ற முடிஉடையவரும்; கோபுரம் போன்ற முடி-யுடையவரும்; நீள்கேசங்களை உடைய தாடியை உடையவரும்; நல்ல உடற்கூறு அழகைப் பெற்றவரும்; வர்ம சாத்திற முறைகளை வகுத்தவரும்; சிறிய பாதங்களை-யும், ஆறடி உயரமும் உடையவரும்; உடலுக்கேற்ற பருமன் உடையவரும்; ஆயிரக் கணக்கான சத்திவேள்விகளைச் செய்தவரும்; அங்க இலக்கணம் வகுத்த வரும்; அழகிய பேச்சுக்களையுடையவரும்; சுமார் 155ஆண்டுகள் வாழ்ந்து திடீரென மறைந்தவருமாவார்.

**4) தென் மதுரைக் கருவூரர்:-**

அழகிய பிறைச் சந்திரன் வடிவம் போல் முடியை அள்ளி முடிந்தவரும்; முதல் கடல்கோளின் போது தென்னாட்டை ஆண்டவரும்; தென் தமிழைப் பயிற்று விக்கத் தமிழ்ச் சங்கத்தைப் பயன்படுத்தியவரும்; செஞ்சடையன் சேகரனை வழிபட்ட வரும்; அரச அம்சம் பொருந்தியவரும்; சிறிய இளந்தாடியுடையவரும்; சிவந்த மேனி யுடையவரும்; சிலகுறிகள் (நல்லிலக்கண மார்புடையவர் — இதுபற்றிய விளக்கங்-கள் முறையாக [இரகசியம்] காக்கப்படுகின்றன, இதுபோன்ற அமைப்பு உடையவரே இன்றைய நமது குருதேவர்) உள்ள உடல்வாகு பெற்றவரும்; ஆயகலை அறுபத்து நான்கு கலைகளை முறையாக வகுத்து, தொகுத்து, நடத்தியவரும்; 'அன்பு' எனும் சமத்துவக் கொள்கை கொண்டவரும்; எதிரிகளை மிக எளிதாகப் பட்டும் படாமலும், தொட்டும் சுட்டியும் வர்மக்கலை மூலம் அழித்து வெற்றி கொண்டவரும் இவரே.

**5) குமரியாற்றங்கரைக் கருவூரர்:-**

ஆயிரத்துக்கும் மேற்பட்ட குமரிப்பூசைகளைச் செய்தவரும்; குமரிப்பூசைகளை

முறையாக வகுத்தவரும்; குமரியாற்றங்கரையில் வாழ்ந்தவரும்; [illegible]கள் பலவால் தீண்டப்பட்டவரும்; குமரி சித்தியைப் பயக்கும் பார்வை, நடை, பேச்சு, செய்கை உடையவரும்; நல்ல சிவந்த மேனியும்; அழகிய பார்வையுடைய கண்ணும்; மாதவர் மயங்கும் [illegible] [illegible]ப்புமுடி முடிந்தவரும்; கன்னியாகுமரியையே வழி பட்டவரும்; காந்தாரம் வரை கால்நடையாகப் பயணம் செய்தவரும்; சுமார் 456 ஆண்டுகாலம் வாழ்ந்தவரும்; [illegible] செங்கோல் ஓச்சியவரும்; கந்தர்வர்களுக்குச் சத்தியைக் கொடுத்தவரும் இவரே.

6) பஃறுளியாற்றங்கரைக் கருவூரார்:-

பயங்கரப் புரட்சி மிகு மேடைப் பேச்சாளரும்; உளி போன்று சிறுமாணுக் -கர்களை உண்டு பண்ணி பெரிய மலை போன்ற பெரியபெரிய செயல்களையும், சாதனைகளையும் செய்தவரும்; பரமேசுவரன் பரமேசுவரியை வணங்கியவரும்; பல ஆண்டு காலமாகத் தவத்திலே ஆழ்ந்தவரும்; பாமரமக்களை அன்புடன் காத்து ஆதரித்தவரும்; பசும்பொன்மேனி நிறமுடையவரும்; விரிசடை கேசங்கள் உடையவரும்; வெண்ணிற தாடிமுடியுடையவரும்; அங்கம், வங்கம், கலிங்கம், காந்தாரம், சயாம், இருண்டகண்டம் முதலிய நாடுகளுக்குக் ககன மார்க்கமாகச் சென்று சில மருந்துகளையும், பூசைமுறைகளையும் அறிந்து வந்து சீடர்களுக்குவித்தவரும்; 536 ஆண்டு காலம் மண்ணுலகில் வாழ்ந்தவரும் ஆவார்.

7. கபாடபுரத்துக் கருவூரார்:-

கபாலிகரோடு தொடர்பு கொண்டவரும்; கபாலிகர்களின் குருபீடமாக இருந்தவரும்; கபாலீசுவரியைத் தொழுது வணங்கியவரும்; கார்மேக நிறத்தை யுடையவரும்; கார்குழல் கன்னிகளைக் கன்னிப்பூசை செய்தவரும்; கன்னிப்பூசையின பூசை முறையை மிக அழகாக வர்ணித்து வர்ணித்து முறைப்படி உண்டாக்கியவரும்; ஆயிரத்தெட்டு அண்டபிண்டங்களைச் சந்தித்து அளாவியவரும்; காற்றை விடக் கடுகிப் பயணம் செய்யக் கூடியவரும்; சுமார் 756 ஆண்டுகள் வாழ்ந்தவரும்; [இவர் சுமார் 1000 ஆண்டுகள் இருந்ததாக ஒரு சிறு குறிப்பு உள்ளது. அது ஆராய்தற் -குரியது] எங்கும் எப்போதும் ஒரே நேரத்தில் நினைத்தவுடன் செல்லும் தன்மை பெற்றவரும் ஆவார்.

8) தாமிரபரணியாற்றங்கரைக் கருவூரார்:-

தலைவாழைப் பூசை செய்தவரும்; தாராபுரத்துத்தாயை வணங்கியவரும்; தாமிரத்தகட்டின் ஒளியையுடையவரும்; தாமிரபரணியாற்றங்கரையில் வாழ்ந்தவரும்; தந்தரம், தாந்தரம், தாந்தரீகம், மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், தவம், வேள்வி, சித்தம் எனும் ஒன்பது தெய்வீகக் கலைகளை முறைப்படி யருவபூசை, வேள்வி இவை -களில் நடத்தியவரும்; நிறைகுடம் போன்றவரும்; அமைதிக்கடல் போன்றவரும்; அளப்பரிய ஈகைக்குணமுடையவரும்; சுமார் 438 ஆண்டுகள் வாழ்ந்தவரும் ஆவார். இவர்தான் பிற்காலத்தில் கி.பி. 785 - 1040 வரை வாழ்ந்த பதினோராவது பதி -னெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களுக்கு தஞ்சைப் பெரிய கோயில் கட்டி முடிக்க ஆனைத்து தந்தர, தாந்தர, தாந்தீரகத் தகடுகளை வகுத்துக் கொடுத்ததாக அவரே கூறுகிறார்.

## 9) வைகையாற்றங்கரைக் கருவூரார்:-

வைகை நதியிலே உதித்தவரும்; வையத்துள் மிகுதியாக வாழ்ந்தவரும்; வைகைக்கு வழிவகுத்தவரும்; இரண்டாம் கடல் கோளின் போது வாழ்ந்தவரும்; பங்குனி முழுநிலவில் நிறைந்தவரும்; முழுப்பிறவியில் எண்ணற்ற சத்தி பீடப் பருவ மண்டலப் பருவபூசைகள் செய்தவரும்; இளந்தாடியுடையவரும்; வைகறைப் பொழுதின் நிறத்தையுடையவரும்; 108 ஆண்டுகள் இருந்தவரும்; கூண்டோடு கைலாயம் சென்றவரும் ஆவார்.

இந்த வைகையாற்றங்கரைக் கருவூரார்தாம் கூண்டோடு விண்ணுலகம் வானுலகம், அமரர்உலகம், உம்பர்உலகம், தேவர்உலகம், சொர்க்கம், வைகுண்டம் முதலிய பல இடங்களுக்கும் செல்லக் கூடிய தகுதியைப் பெறுவதற்காக; ஏழு பருவத்துப் பெண்களையும் சத்திகளாக அறிவித்துச் சித்திப் பூசைகளையும், முத்திப் பூசைகளையும், பருவபூசைகளையும் செய்தவர். எனவே, இவர் இம் மண்ணுலகின் இறுதிவரை எப்பொழுது வேண்டுமானாலும், என்ன வடிவில் வேண்டு -மானாலும் தோன்றலாம்; அப்படித் தோன்றி எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்கலாம் என்று பெறற்கரிய நிலைகளைப் பெற்றார். இவர்தான் பெண்ணின் வகை -கள் பற்றியும், அங்கவியல்கள் பற்றியும், பூசைக்குரிய பெண்கள் பற்றியும், சிற்ப ஓவிய மகளிர் இலக்கணங்கள் பற்றியும்; பத்தி சத்தி சித்தி முத்தி எனும் நான்கு வகைப் பூசைகளிலும் மகளிர் எப்படியெப்படிப் பயன்படுத்தப்பட வேண்டும்? எப்படியெப்படிப் பயன்படுவர்? ஏந்தரீகத் தாந்தரீக மாந்தரீகப் பூசைகளில் பெண் -களின் நிலை என்ன? கிராமதேவதை, தேவியர், சமாது நிலைப் பெண்கள், ஆவி நிலைப் பெண்கள், பேய்நிலைப்பெண்கள்......முதலியவர்களையெல்லாம் எப்படிச் செயல் நிலைப்படுத்த வேண்டும்? அருள் வழங்கு நிலைக்கு உரியவர்களாக்க வேண்டும்?...... என்பன போன்ற மிகப்பெரிய நுட்பச் செயல் திட்டங்களையெல்லாம் இவர்தான் எழுதியிருக்கிறார். எனவேதான், இவரது குருபாரம்பரியங்கள் கட்டாயமாக விந்து வழி வாரிசுகள் அன்றி மற்றவர்கள் அறியக் கூடாது என்று தடைவிதிக்கப் பட்டிருக்கிறது.

மேலும், இவர்தான் மகளிரில் ஆரம்பநிலையிலேயே ஒதுக்கப்பட வேண்டியவர் -கள், விலக்கப்பட வேண்டியவர்கள், நீக்கப்பட வேண்டியவர்கள், நீச்சமானவர்கள், உச்சமானவர்கள், நடுநிலைப்பட்டவர்கள், பயன்படாதவர்கள், அருளுலகப்பித்துக் குளிகள், அருளுலக ஏமாற்றுக்காரிகள், சாபத்திற்குள்ளானவர்கள், பாவநீக்கம் பெற முடியாதவர்கள்......என்று பலவாறாக மகளிர்களில் பட்டியலிட்டுக் காட்டுகிறார். அவர்களை அடையாளம் கண்டு கொள்வதற்குரிய வெளிப்படையான உறுப்பிலக் -கணங்களையும், அங்கவியல்களையும் பற்றி மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார். எனவேதான், இவரையும் பாரதகாலக் கண்ணதேவனையும் தொடர்பு படுத்திப் பல செய்திகள் பெரிய அளவில் இவருடைய அரசபாரம்பரியத்திலும், குருபாரம் பரியத்திலும் இருக்கின்றன. இதே செய்திகள் இவருடைய இலக்கிய பாரம்பரியத்தில் இலைமறை காயாகத்தான் கூறப்பட்டிருக்கின்றன ஆனால், பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் அரசபாரம்பரியம், குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் மற்ற இலக்கியங்கள் அனைத்திலுமே இந்த வைகையாற்றங்கரைக் கருவூராருக்கும் பாரத காலக் கண்ண தேவனுக்கும் உள்ளதொடர்புகள் பற்றிய செய்திகள் நிறைய கூறப்படுகின்றன.

**10) அமராவதியாற்றங்கரைக் கருவூரர்:-**

ஆற்றின் நீர்ப்பெருக்கிலே தோன்றியவரும்;அமராவதி வெள்ளை மாளிகையிலே வசித்தவரும்; ஆழமிகு பேச்சும், கருத்தும் கொண்டவரும்; அழகிய இராச சிம்ம நடையுடையவரும்; ஆற்றல்மிகு ஆதிபரமேசுவரியைத் தொழுதவரும்; ஆதி ஏசு -வுக்குக் குருவாக இருந்தவரும்; பின் வர இருந்த ஆரியர்களை அழிக்கத் திட்டம் வகுத்து ஏட்டில் எழுதியவரும்; ஆயிரம் யானைப்பலம் கொண்டவரும்; 250ஆண்டுக் காலம் வாழ்ந்தவரும்; விண்வெளிப்பயணம் செய்தவரும்; அமிர்தம் உண்டவரும்; ஏழுநிற வண்ணங்களை ஒரு நிறமாகக் கொண்ட வெண்ணிற மேனியை உடைய வரும்; அழகு மீசையுடையவரும் ஆவார். இவர்தாடி வளர்க்கவில்லை.

**11) காவிரியாற்றங்கரைக் கருவூரர்:-**

குருபாரம்பரியத்தை எழுதியவரும்; [குருபாரம்பரியத்தை விரிவாக எழுதினார். குருபாரம்பரியத்தை தனது மகனும், பேரனும் எழுத அனுமதி தந்தார். இதனால் இவர் மிகவும் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றார். ஏனெனில் பீடாதிபதிகள் அல்லாத மகனும் மற்றவர்களும் குருபாரம்பரியம் எழுத அனுமதி தந்தார். இவர் மூன்று பாரம்பரியங்களையும் விரிவாக (குருபாரம்பரியம் இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம்) எழுதியதோடு, குருபாரம்பரியத்தை விரிவாக எழுதினார். அதில், தமிழர் வடஆரியப் போராட்டத்தைப் பற்றி விரிவாக விளக்கி எழுதினார் இவர்தான் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி பதினெண்சித்தர்களுடைய சித்தர்நெறியான சீவநெறியெனும் இந்துமதத்தை மெய்யான இந்துமதம் என்று பெயரிட்டதையும்; பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியரின் சமசுக்கிருத மொழிக்குரிய வேதமதக் கலப்புற்ற புதிய கலப்பு மதத்தை 'பொய்யான ஹிந்துமதம்' என்று பெயரிட்டத்தையும் ஏராளமான பக்கங்களிலும், பல தனிநூல்களிலும் விளக்கி -யுரைத்து இருக்கின்றார். பொய்யான ஹிந்துமதத்தை வென்று மெய்யான இந்து மதத்தை எப்படி மறுமலர்ச்சியுறச் செய்ய வேண்டும் என்பதற்கான செயல்திட்டங் -களையும் மிகத் தெளிவாக விளக்கியுரைத்து இருக்கின்றார்.] இருபெரும் கோயில்களை எழுப்பியவரும்; 255 ஆண்டுக்காலம் மக்களறிய வாழ்ந்தவரும்; பிற்காலச் சோழப் பேரரசை நிறுவியவரும்; வேங்கைப்புலியாக உலாவி ஆரிய ஆடுகளை விழுங்கிய வரும்; சமணபுத்தர்களுக்குப் பேராதரவு கொடுத்திட்டவரும்; ஆலயம், கோயில், பீடம், திருப்பதி... முதலிய 48 வகையான வழிபாட்டு நிலையங்களையெல்லாம் புதுப்பித்தவரும்; பதினெட்டு முறை தொடர்ந்து உலகப் பயணம் செய்தவரும்; அரிய பெரிய வித்தைகளை ஆயிரக்கணக்கில் செய்தவரும்; அண்டம்விட்டு அண்டம் நொடியில் செல்லக் கூடியவரும்; முதலாம் இராசராசனுக்குக் குருவாகயிருந்தவரும்; ஆரிய மாயையில் மயங்கிய இராசராசனைத் திருத்தப்பாடுபட்டவரும்; ஆயிரம் சூரியக் கதிர்களின் ஒளிகொண்ட கிரீடம் தாங்கியவரும்; சோழப் பேரரசின் காப் பாளரும்; அரசர்களுக்கே உரிய பிரமாண்டமான மீசை வைத்திருந்தவரும்; அழகிய அன்னப்பறவை நடையினையும், பார்த்தவர் மயங்கும் தோற்றத்தையும் உடையவரும்; புரட்சிக்கருத்துக்களையுடையவரும்; 243 திருமணம் புரிந்தவரும்; வாலைப்பூசை, கன்னிப்பூசை, குமரிப்பூசை; சுடுகாட்டுப் பூசை, இடுகாட்டுப்பூசை, புதைகாட்டுப் பூசை, மாயாநிலைப் பூசை, ஓயாநிலைப் பூசை, சாயாநிலைப் பூசை முதலியவைகளைச் செய்தவரும்; தந்தரம் தாந்தரம் தாந்தரீகம் இவைகளைச் செய்த வரும்: மந்தரம் மாந்தரம், மாந்தரீகம் இவைகளை வழிவகுத்துச் செய்தவரும்; புவியில் புதிரான மனிதராக வாழ்ந்தவரும் இவரே. (முற்றும்)

ஓம்

# எங்களுக்கு தெரியும்! உங்களுக்கு........!

## அரசமர வழிபாடு

அரசமர வழிபாடு — என்ற வழிபாடு இந்துக்களிடையே மிகவும் சிறப்பான ஒன்ருகும். இது குறித்து குருதேவர், இந்து மதத் தந்தை, அருட்கொடை வள்ளல் வெளியிடும் செய்தியை வழங்குகின்ரேம்,

அரசமரத்தை வழிபட நினைக்கும் ஆண் பெண் இருபாலரும் நாள்தோறும் சென்று சுற்றி வர வேண்டும். அவ்வாறு சுற்றி வரும்போது; ஞாயிற்றுக்கிழமைக்கு சூரிய காயந்திரியையும், திங்கட்கிழமைக்கு திங்கள் காயந்திரியையும், செவ்வாயன்று செவ்வாய் காயந்திரியையும், புதனன்று சீவ காயந்திரியையும், வியாழனன்று வியாழன் காயந்திரியையும், வெள்ளியன்று மாயோன் காயந்திரியையும், சனியன்று சனீசுவரக் காயந்திரியையும் கூறி வரவேண்டும். தங்களுக்கு நன்மையே வேண்டும் என்போர் மரத்தை இடமிருந்து வலமாகவும்; தீமை அகல வேண்டும் என்போர் மரத்தை வலமிருந்து இடமாகவும் சுற்றி வர வேண்டும். குருபாரம்பரியத்தில், இவ்வுண்மையைக் கூறிஞலே தலை வெடித்துச் சுக்குநூருகிடும் என்றுள்ளது. இருந்-தாலும், அருட்கொடை வள்ளல் மனமுவந்து இவ்வரிய செய்தியை வழங்கியுள்ளார்.

அரச மரத்தின் அடிமரத்தில் அதாவது வேரில் ''பிறமண்'' தவநிலையில் இருப்பதாகவும்; அரச மரத்தின் தண்டில் மாயோன் உறக்கத்தில் இருப்பதாகவும்; அரசமரத்தின் மேல்பகுதியில் சிவபெருமான் இருப்பதாகவும், குருவாக தட்சிணுமூர்த்தியாக இருந்து மோன நிலையில் அனைத்து ஞானங்களையும் வழங்குவதாகவும் குருபாரம்பரியம் கூறுகிறது. எனவே தான், கருத்தரிப்பதற்காகச் செல்கின்ற பெண்கள் அடிமரத்தைத் தொட்டு வணங்குவார்கள். செல்வங்களையும், கலைகளையும் அதாவது அரச நிலைகளையும், அரசு பதவிகளையும் பெற்றுக் கொள்ள விரும்புகின்றவர்கள்; நடுமரத்தைத் தொட்டு வணங்குவார்கள் ஞானத்தையும், மோனத்தையும், தவத்தையும், அருட் சத்தியையும், சித்தியையும், பேரின்பப் பயன்களையும், சாகாக் கல்விகளையும் கற்க விரும்புகின்றவர்கள் அருளுலகில் பரம்பொருளாகவும் மூலப் பொருளாகவும், அுதிப் பொருளாகவும் இருக்கின்ற சிவபொருமானை வணங்குவதற்காக எட்ட இருந்து அரச மரத்தை முழுமையாகக் கண்ணல் கண்டும்; அரச மரத்தின் அடியில் அமர்ந்து மேல் நோக்கி நுனியைப் பார்த்த படியும் பூசைகளைச் செய்வர். -இந்த மூன்று பூசையே அரசமரப் பூசை எனப்படும். இது பற்றிய மற்ற விபரங்களைக் குருவழிக் காண்க.

**குறிப்பு:-** (க) அரசமரத்தடியில் நிர்வாணமாக அமர்ந்து தவ பூசை செய்தலும் அரசமரத்தை நிர்வாணமாகச் சுற்றி வந்து வழிபடுதலும் என்ற முறைகளும் உண்டு.

(உ) தட்சிணுமூர்த்தி ஆலமரத்தின் அடிப்பகுதியிலும் அரசமரத்தின் மேல் பகுதியிலும் அமர்ந்திருக்கிருர் என்பதே குருபாரம்பரியச் செய்தி.

## வணக்கவுரை

# பொருளுலக வாழ்க்கை முடிந்துவிட்டது!

இளைஞர்களே! வாழ்வின் வசந்தங்கள் முடிந்துவிட்டன, ஆம்! இன்றைய கால இளைஞர்கள் தங்கள் வாழ்வின் வசந்தங்களை முடித்துக் கொள்ள வேண்டும். இது தலைவிதியல்ல; சமுதாயத்தின் கட்டாயம். நம்முடைய முன்னோர்கள் செய்த தவறோ அல்லது செய்யமுடியாது போன செயல்களோ!; அவற்றின் தண்டனையை இன்று நாம் அநுபவிக்கின்றோம். அநுபவித்தேயாக வேண்டும். முன்னோர்கள் முன்னின்று ஏற் -படுத்த முடியாதுபோன ஒற்றுமையை, தன்மான உணர்வை, தன்னம்பிக்கையை நாம் நம்மிடையே உருவாக்கியேத் தீரவேண்டும். அதற்காகத்தான், இளைஞர்களே உங்களை அழைக்கின்றோம்!

ஈழத்தின் போர் ஈழத்துக்கு மட்டுமல்ல; இந்த உலகுக்கேதான். பிஞ்சுக் கைகளும் துப்பாக்கியோடு போர்முனையில். பெண்களின் கையில் செம்பஞ்சுக் குழம் -பில்லை; பசிய செங்குருதியே. இவைகள் காட்டும் உண்மை...... தியாகம், காதல், இன்பம், போதை...இங்கில்லை; துப்பாக்கியின் வெடியொலியும் துடிதுடிக்கும் உணர்வு களும்தான். அவர்களின் இளமைக்கனவு, கற்பனை, வசந்தம், விருந்து, எல்லாமே தமிழகத்தின் விடுதலையில் பூக்கின்ற பூக்களின் வாசனையை மரணம் தழுவுகின்ற வேளையிலும் நுகர்ந்து மடிய வேண்டும் என்று நினைப்பதே. இந்த வீரமரணப் போராட்டக்களம்தான் அவனது வசந்தகால மண்டபம் அந்த மண்டபத்தில் கொலு விருக்கவே அவன் விழைகின்றான். ஏன்? நாளை அவனது மகனாவது உரிமைகீதத்தை விடுதலை மணத்தை சுவாசிக்கட்டும் என்பதற்காகத்தான். அவன் அங்கு எருவா கின்றான்! இனியாவது தமிழின ஒற்றுமைப் பயிர் செழிக்கட்டும்! எரியட்டும் ஈழம்! உருளட்டும் தமிழ் இளைஞர்களின் தலைகள்! இந்நிலை உலக முழுவதுமுள்ள தமிழர் -களின் சிந்தனைக்கு விருந்தாகவும், மருந்தாகவும்பயன்படட்டும்.

நண்ப! இப்போதாவது புரிந்திருக்கும் உண்மை என்னவென்று!. நமது தியாகத்தின் தீபச் சுடரொளியால்தான் நமது மகன்கள் படிக்க வேண்டும். வாழ்க்கைத் தேவைகளுக்காகக் கற்றுக்கொண்ட மொழியால், அரசியல் கட்சிகளால், கலையுலகக் கதாநாயக நாயகிகளால், சாதியால், மதத்தால் பிரிந்து கிடக்கின்றார்கள் நம் தமிழின மக்கள். இவர்களை எப்படி ஒன்றிணைப்பது? எங்கு நின்றிணைப்பது? என்ன சொல்லித் தட்டியெழுப்புவது? எதைச் சொல்லி ஒன்று கூட்டுவது? என்ன கொடுத்தால் இவர்கள் திரளுவார்கள்?... புரியாமல் நிற்கின்றோம் நாம். நம் தமிழின மக்களின் உணர்வுகள்!, தேவைகள்!... என்னவென்றே தெரியவில்லை. இன்றைய நமது மக்களுக்கு எதிலும் அமைதி கிட்டவில்லை. என்பது நன்றாகத் தெரிகின்றது. இந் நிலையே தமிழர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம் ஏற்படத்தானே செய்யும்? அதற்காக என்னென்ன செய்ய வேண்டுமென்று சிந்திக்க வேண்டாமா?! நமது சந்திப்பெல்லாம் சிந்திப்பாகட்டும்!......புரிகிறதா???

இதுவரை நமது தலைவர்களும், இயக்கங்களும் மொழியின் பெயரால், இனத்தின் பெயரால், கலை சார்ந்த பண்பாட்டின் பெயரால், நாடு சார்ந்த வரலாறுகளின் பெயரால்......நம் மக்களை ஒன்று திரட்ட முயன்று தங்கள் தங்களுக்கு என்று பொருளையும் புகழையும் பதவியையும் திரட்டிக் கொண்டு குறுகிய வட்டார் எல்லைக்குள் வாழ்ந்து சென்றிட்டது பற்றிய வரலாற்றுச் செய்திகளையும், வாழ்ந்து கொண்டிருப்பது பற்றிய நிகழ்காலச் செய்திகளையும்தான் காண்கிறோம் நாம். இன்னும் சொல்லப் போனால், அன்றைக்கும் சரி! இன்றைக்கும் சரி! என்றைக்கும் சரி! நமது தலைவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களின் விளையாட்டுக்களாகத் தான் நமது சமய, சமுதாய, கலை, இலக்கிய, அரசியல் துறைகள் இயங்குகின்றன இதை மாற்றுவதற்காகத்தான் நாம் சிந்திக்கப் புறப்பட வேண்டும். (அதாவது நமக்குத் தலைவர்கள் முக்கியமில்லை; தத்துவம் முக்கியம். நம்மை யார் தலைமை தாங்கி நடத்துகின்றார்கள் என்பது முக்கியமில்லை; எந்தத் தத்துவம் நம்மைத் தலைமை தாங்கி நடத்துகின்றது என்பதுதான் முக்கியம். நாம் தலைவர்களின் புகழ்பாடி வளரத் தேவையில்லை; நமது கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல் சித்தாந்தங்களையும், இவற்றிற்குரிய வரலாற்றுப் பின்னணிகளையும், இலக்கிய அடிப்படைகளையும் சொல்லித்தான் வளர வேண்டும்)

இந்தக் காரிருளை எப்படிப் போக்குவது? எந்த எண்ணெயை ஊற்றி விளக்கெரித்து ஒளியெழுப்பிப் போக்குவது? இளைஞர்களே! உங்களின் ஆசைகள், கனவுகள், கற்பனைகள், இளமைக்காலம் என்கின்ற எண்ணெயால் மட்டுமே இந்தக் காரிருளைப்போக்கவியலும். ஆம் கடினம் தான்! சிந்தித்துப்பார்! ஈழத்தைப் பார்! அமெரிக்கா, பிரான்சு, இரசியா, சீனா, வியட்நாம் முதலிய நாடுகளின் புரட்சி வரலாற்றைப் பார்! மனிதனின் இறப்பும் போராட்டமும் இன்றி எந்த நாடும் முழுமையான விடுதலையை அடையவில்லை. ஒரே இனம், மொழி உள்ள நாட்டிலேயே இப்படி என்றால்; நம் நாட்டை நினைத்துப்பார். எப்படி இந்த நாட்டில் உள்ள வறுமையையும், வெறுமையையும் போக்கப் போகின்றோம்?! இமயமலை உயரமாக உள்ளது என்று யாரும் ஏறாமல் சூட்டுக்குச் செல்லாமலில்லை. தலைவர் குருதேவர் இருக்கின்றார் வழிகாட்ட இனியாவது அறிந்து கொள்வோம்! நம்முடைய உண்மையான உழைப்பை நல்கி மறுமலர்ச்சிப் பணிக்காகப் புரட்சிப் பாதையை அமைப்போம்!

பிறம்மாச்சாரியார் சி. கவிக்குமார்.

---

## அறிவிப்பு வேண்டுகோள்

அருட்பட்டம் பெற்றவர்கள் அனைவரும் கட்டாயம் குருதேவர் அறிக்கைச் சந்தாதாரராகச் சேர வேண்டும். இந்த ஆண்டிற்கான (1987) குருதேவர் அறிக்கைச் சந்தாதாரராகச் சேராதவர்கள் உடன் ரூ 36 (12X2.50 = ரூ 30 தவிர அஞ்சல் செலவிற்கு ரூ 6) செலுத்தி சந்தாதாரராகச் சேருமாறு வேண்டப்படுகிறார்கள்.

## அடிமைத் தமிழா முடிவெடு விடிவு பெற

ஈழத் தமிழர் படுகொலைக்கு இனத்தமிழா
வேழமெனப் பழிவாங்கிட மொழிவழி ஒற்றுமைப்படு
ஆழக்கடல் கடந்து வாழ்பவர் அழுகிடணுமா
அழுதிடவோ எழுதிடவோ கூட ஒற்றுமை இல்லையே
பழுதுற்றிட்ட தமிழினமே நினைவுறு பாரம்பரியத்தை
தொழுது வாழும் கோழைதானு நீ இறுதிவரை
இழுபறியா நீ! ஈனப்பிறவியா நீ! கங்காணியா நீ! எடுபிடிதானு நீ!
கழுவிக் கொள் களங்கத்தைக் காலம் வந்துற்றது வேங்கையாகிடு
முழுவலிமையுறு மூவுலகும் வென்றிடலாம் மூத்தகுடியே!
எழுந்திடு! இனதுரோகியாய்! விரோதியாய்! இருந்திடாதே!
ஏழுபிறவியிலும் போக்கிடவியலாப் பழியுருதே வீருற்றிடு
தழுவாதே அன்னியரைப் போதும் தாழ்வு
கட்சியென்ன? ஆட்சியென்ன? சூழ்ச்சியே அனைத்தும்!
விழிச்சியுறு எழுச்சிபெறு கிளர்ச்சி செய் மறுமலர்ச்சிபெறு
கூலியாய் வேலியாய் அன்னியர்க்குழைத்தது போதுமய்யா
புலியாய்! புயலாய்! மாறிடு மாறிடு! புகழ் பெற்றிடு பெற்றிடு!

பெருங்கவிமழை தமிழ்வேந்தன்

---

## 1992-96 இல் அருட்பேரரசு அமையும்?!

''கருணையில்லா ஆட்சி கடிது ஒழிக''- என்று அண்மையில் வாழ்ந்த அருளாளர் வடலூர்ப் பெருவெளிப் பெருந்தகை, திருவருட் பிரகாச அருட்கொடை வள்ளல், அருட்பெருஞ்சோதி ஆண்டவர், அருட்பா வழங்கிய ஞானசித்தர் இராமலிங்க அடிகளார் மிகத் தெளிவாகத் தமது கருத்தை வெளிப்படையாக அருட்பாவாகப் பாடியுள்ளார். மண்ணுங்கட்டி உடைந்தால் கூட வருந்தக்கூடிய இவரே 'கடிது ஒழிக' என்று; ஒழிக்கப்படுவதிலும் கடுமையைக் கையாண்டே ஒழிக்கப்படுதல் வேண்டும்.........என்று ஆயுதப்புரட்சியை, குருதி கொட்டும் புரட்சியை, கடுமை மிகுந்த போரைப் பரிந்துரைக்கிருர். ஆமாம், அன்பே வடிவான சிவத்துக்கும் அருளே வடிவான சத்திக்கும் வாரிசான முருகப் பெருமான் வேலேந்தித் தேவசேனாதிபதியாகப் படை நடத்தித்தான் கருணையில்லா ஆட்சியை ஒழித்தான்; அவனைப் போலவே, அவனது மாமன் எப்போதும் அரவணைப் படுக்கையில் துயிலுபவன் இராமனுக வில்லேந்திப் போர்க்களம் புகுந்தும்; கண்ணனாக அனைவரையும் போர்க்கோலம் பூண்டு போரிடச் செய்தும்

குருதியாற்றில் நீராடித்தான் கருணையில்லா ஆட்சிகளை ஒழித்தான். இவர்களால், ஏன். தங்களின் அளப்பரிய அருளாற்றலாலும், தத்துவ அருளுரைகளாலும் கருணை -யில்லா ஆட்சிகளை ஒழிக்க முடியவில்லை?!?!?!......சிந்திப்பீர்.

**'நூறுநூறு கோடி சிவன்களும், மால்களும், பிறமண்களும் நுங்கிட அருளாட்சி -யால் மானுடம் காப்பவர்களே பதினெண் சித்தர் பீடாதிபதிகள்''... என்று தொடங்கும் குருபாரம்பரிய வாசகங்கள்; தொடர்ந்து அருளாட்சிகள் அவ்வப்போது இம்மண்ணுலகின் தேவைக்கேற்ப உருவாகிட்ட, உருவாகிடும், உருவாகப் போகும் செய்திகளை விளக்குகின்றன. அவற்றின்படி 1992 முதல் 1996 வரையுள்ள ஒரு மண்டலப் பருவபூசை நிறைவுக் காலத்தில் [48 முழுநிலவுப் பூசைகள்] அருளாட்சி அமைப்புப்பணி கணிசமான நிலையினை அடைந்திடும்.**

நம் நாட்டின் இன்றைய நிலைமைகளில், ஏறத்தாழ எல்லோருமே; ...'மொழியின் பெயராலோ!'; 'இனத்தின் பெயராலோ!'; 'நாட்டின் பெயராலோ!'; அரசியல் சித்தாந்தத்தின் பெயராலோ!';... எந்த ஒரு புதுமையையோ! அல்லது புரட்சியையோ!... செய்ய இயலாது! இயலாது! இயலாது! இயலவே இயலாது...'' என்ற கருத்தினை நன்கு புரிந்துள்ளனர். எனவேதான், ''மதவழிப் புரட்சியால்தான் அனைத்து வகையான நோய்நிலை நலிவுகளையும், பேய்நிலைத் தீய [தவறான, கேடு தரும்] சத்திகளையும் முழுமையாக அகற்றிட முடியும்'' (All the ills and evils of our nation can be eradicated only through the Religious Revolution.....— taken from Mr M. P. Pillai's book 'The Revolution in India Why? When? and How?'—) -என்ற கருத்தைப் பொதுமக்களிடையில் பரப்பும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பணிதான். அருளாட்சி அமைப்புப்பணியின் அடிப்படை! உயிரோட்டம்! ஊக்கச் சத்தி!...

இத்திருநாட்டின் கெட்டகாலம்; கடந்த சில நூற்றாண்டுகளாக அன்னிய மதங்களின் ஆக்கிரமிப்புப் போராட்டச் சத்திகளின் சதிகளாலும்; போர்களின் கடுமைகளாலும்; கொடுமைகளாலும்;... 'நாத்திகவாதம்', 'தாயகப் பண்பாட்டு வெறுப்பு', 'அன்னிய நாகரீக மோகம்', 'தாயகத் துரோகம்', 'சமுதாய நல விரோதம்'. 'மொழிப்பற்றின்மை'. தன்னம்பிக்கையின்மை'. அடிமைச் சிந்தை', 'கூலிநெஞ்சம்'. 'தாயகத்தாரை மதியாமை',... எனும் இழிபண்புகள் முளைத்துச் செழித்துவிட்டன இவ்விழிபண்புகளின் அழிநிலைகள், பழிநிலைகள், ஒழிநிலைகள், நோய்நிலைகள்... முதலியவற்றால் **'மதத்தின் அருமை, பெருமை, அரியபயன். ஆருயிரனைய இன்றியமையாமை...'** முதலியவை எல்லாம் பெரும்பாலானவர் -களுக்குத் தெரியாமலும்; தெரிந்தாலும் புரியாமலும்; புரிந்தாலும் நடைமுறைப் படுத்த முடியாமலும் போய்விட்டன. இவற்றால்தான். நம் தயாகத்தின் எல்லாத் துறைகளுமே நலிந்து மெலிந்து நோயுற்ற நிலையிலேயே தொடர்ந்து இருந்து வருகின்றன. இதேபோல், தொடர்ந்து நம்மை ஆளுகின்றவர்களின் பெரும் பகுதி -யினர் எல்லாக் குறைகளையும் உடையவர்களாகவும், எல்லாத் தவறுகளையும் செய் -பவர்களாகவும், சமுதாய நல விரோதிகளாகவும். வருங்காலச் சந்ததியினரின் துரோகிகளாகவுமே இருந்திட நேரிட்டிடுகின்றது. இன்னும் சொல்லப் போனால், இத்திருநாட்டை வழிநடத்தும் சத்திகளாக உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் எந்தத் தகுதியும் திறமையும் பக்குவமும் பெறாதவர்களாகவும், அனைத்து வகையான வெறிகளையும் செயலாக்கும் தன்னலக்காரர்களாகவுமே இருந்து வருகிறார்கள்... எனவேதான்; எங்கும், எதிலும். எல்லா நிலைகளிலும், வகைகளிலும், எல்லாத்தரங்களி -லும், திரங்களிலும், திறங்களிலும், ஆன்மீக உணர்வாலும், மதவாழ்வியல்களாலும், அருளாளர்களின் சாதனைகளாலும், போதனைகளாலும் உருவாகிடும் தூய்மையாளர் -களையும்; வாய்மையாளர்களையும்; தாய்மொழிப் பற்றுடையவர்களையும்; இனப் பற்றும் இன ஒற்றுமையும் இனச் செழிச்சி நாட்டமும் உடையவர்களையும்;

—தொடர்ச்சி 2-ம் பக்கம்

# திருந்தாதவர்களும் திருத்தம் பெறுவதற்காகத் தேவதேவியின் பரிந்துரை வினாக்கள்

1. அருட்படை வீரர்களுக்கிடையே அங்காடிக்காரர்களின் அவல நிலையா?

2. விடுதலைப் படையினரிடையே விதண்டாவாதக்காரர் -களின் நிலையா?

5. அருளுலக அருட்பெருஞ்சுடர்களைப் போட்டி, பொறாமை, பேராசைகள் எனும் விட்டில் பூச்சிகளா அணைக்கப் போகின்றன?

4. மண்ணையும் விண்ணையும் இணைக்கும் மாவீரர் கூட்டம் கண்ணாமூச்சி விளையாட்டில் காலங் கடத்திடுமா?

5 விண்ணுயர் கண்கவர் கோபுரங்களைக் கட்டிய ஆன்மீக வாரிசுகளா நாத்திகத்தால் வீணாக்கப்பட்டிடுவர்?

6. கட்டுப்பாட்டுடன் திட்டமிட்டுச் செயல்படக் கற்றவர்களா காக்காய்க் கூட்டமாய்ச் சிதறிக் கத்திக் கொண்டிருப்பது?

7. தாயகத்தாரின் ஒற்றுமையின்மையே வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும் வழங்கியதென்பதை உணர்ந்தவர் -களுக்கிடையே கூட ஒற்றுமை உருவாகாதா?

8. தாயகத்துப் பெரும்பான்மையினர் அன்னியருக்கு வேலியாய்' கூலியாய் வாழ்வதை மாற்றிடப் புறப்பட்டிருக்கும் தன்மானத்தாரி -டையேயும் போலி வாழ்வா? கூலி வாழ்வா?

9. ஒருவருக்கொருவர் உதவாமையாலேயே அன்னியர்களின் ஊடுரு -வல்கள் நிகழ்ந்தன என்பதையுணர்ந்தவர்களும் கூட திருந்த மாட்டார்களா? திருத்தப்பட முடியாதவர்களா?

10. உலகாண்ட தமிழினம் ஒற்றுமையில்லாததால்தான் வேற்றூர்களின் வேட்டைப் பொருளாயிற்று என்பதை உணர்ந்தவர்களுக்கிடையில் கூடவா ஒற்றுமை உருவாகவில்லை? உருவாக்கிட முடியவில்லை?

11. கூடிவாழத் தெரியாததால்தான் தமிழர்கள் எங்கும் எதிலும் அடிமை -களாக வாழ நேரிட்டது என்பதை உணர்ந்தவர்களுக்கும் கூடவா கூடிவாழத் தெரியவில்லை?

12. தன்னினத் தலைமையை ஏற்றுப் போற்றிச் செயல்படாததால்தான் தமிழர்கள் தரைமட்டம் ஆனார்கள் என்பதை உணர்ந்தவர்களுக் -கிடையிலும் தன்னினத் தலைமையை ஏற்றுப் போற்றிடத் தெரியாத நிலைமையா?

KVS கருணா அச்சகம், தேரடி தெரு, பொன்னேரி.